# பாரதியின் தேசீயம்



நூலாசிரியர் அ. சீனிவாசன்



# கல்யாண சுப சமிதி

- கலாச்சார பண்பாட்டு பல நோக்கு சேவை நிறுவனம்.
- கணிணி திருமண தகவல் மையங்களின் இணைப்பு.
- ஒரேமுறை கட்டணம் ரூ.360/- மட்டும் வேறு ஏதுமில்லை.
- திருமணம் ஆகும் வரை தமிழகத்தில் எங்கிருந்தாலும் தபால் மூலம் பொருத்தமான ஜாதகங்கள் வீடு தேடி வரும்.
- மாதாந்திர ஜாதி வாரி கூட்டங்களுக்கு இலவச அனுமதி.
- வருடம் இரண்டு முறை சுயம்வரங்கள்.
- விதவை, விவாகரத்து ஆனவர், முதிர் கன்னிகளுக்கு விசேஷமான கவனம், ஏற்பாடுகள், வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- தொலைதூர கிராம மக்களுக்கு கட்டணம் இல்லை 10 எண்ணிக்கையுள்ள ரூ. 5/- மதிப்புள்ள மொத்தம் 50/- ரூபாய்க்கு ஸ்டாம்பு போதுமானது.
- இலவச ஜாதக ஆலோசனை, இலவச பரிகார முறைகளை தெரிவித்தல்.
- கிளைகளுக்கு இலவச அனுமதி I.D. கார்டுடன் அனுமதி.

தொர்பு கொள்க

**தமிழக தலைமையகம்**
**கல்யாண சுப சமிதி**
No. 4/187 E, 38 வது தெரு, சிட்கோ நகர்,
வில்லிவாக்கம், சென்னை - 600 049.
☎ : 2617 00 33. 2617 18 00. 2598530. Cell : 9444156943

# பாரதியின் தேசீயம்

நூலாசிரியர்

**அ. சீனிவாசன்**

(பகவத் கீதையில் உள்ள விஸ்வரூப தரிசனம் அத்தியாயம் முழுமையாக இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது)

பதிப்பாளர்

அ. சீனிவாசன்

நூலாசிரியர் / பதிப்பாளர்

**131, பாஸ்கர் 2வது தெரு,**
**மிருகம்பாக்கம்,**
**சென்னை – 600 092**

**தொலைபேசி – (044)–23760467**

**(விலை ரூ.20/–)**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாரதியின் தேசீயம் |
| ஆசிரியர் | : | அ. சீனிவாசன் |
| மொழி | : | தமிழ் |
| வெளியீட்டெண் | : | முதல் பதிப்பு |
| ஆண்டு | : | 2003 / 2004 |
| தாள் | : | 16 கே.ஜி. மேப் லித்தோ |
| நூல் அளவு | : | 1/8 டெம்மி |
| விலை | : | ரூ.20/– (மாணவர்களுக்கு விலை ரூ.10/–) |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| வெளியீடு | : | அ. சீனிவாசன்<br>நூலாசிரியர்/ பதிப்பாளர்<br>131, பாஸ்கர் 2வது தெரு,<br>மிருகம்பாக்கம்,<br>சென்னை – 600 092<br>தொலைபேசி – (044)–23760467 |
| அச்சு | : | வடிவமைப்பு வி.எஸ். சாமிநாதன்<br>குரோம்பேட்டை. |
| அச்சிட்டோர் | : | ஆர். பாலசுப்ரமணியம்<br>பாரத் பவர் பிரஸ்,<br>162-B, முதல் அக்ரஹாரம்,<br>சேலம் – 636 001.<br>போன் : 0427 – 2265202 |

## பொருளடக்கம்

முன்னுரை

1. தோற்றுவாய்

2. பாரத நாட்டில் தேசீய இயக்கங்கள்

3. பாரதியின் சிந்தனையும் அனுபவமும்

4. ஸ்ரீ கிருஷ்ணனுடைய விஸ்வரூப தரிசனம்


5. பாரத தேவியின் சம்பூரண ரூபம்

6. வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு

7. பாரத பூமி பழம் பெரும் பூமி

8. நிறைவுரை

– நூலாசிரியரைப்பற்றி



## முன்னுரை:

தேசீயம், தேசீய அரசு, தேசீய இனம் என்னும் கருத்து வடிவங்கள் ஐரோப்பிய நாடுகளில் தொழிற்புரட்சியும் நவீன உற்பத்தி முறைகளும், நவீன போக்குவரத்து சாதனங்களும் தோன்றிய காலத்தில் உருவாகி நிலைபெற்றன.

அதன் பின்னர், ஐரோப்பிய வல்லரசுகள், காலனி நாடுகளைப் பிடித்து ஏகாதிபத்ய ஆதிக்கமும் கொடுங்கோன்மையும் நடத்திய போது அதற்கு எதிராக விடுதலைப் போராட்டங்கள் வீறு கொண்டு எழுந்த போது ஆசிய, ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் தேசீய விடுதலை இயக்கங்களாக விரிவடைந்து அனைத்து நாடுகளிலும் தேசீயம், தேசீய அரசுகள், தேசீய இனங்கள், என்னும் கருத்து வடிவங்களும் பரவி மக்களுடைய உள்ளங்களில் இடம் பெற்றன.

இவ்வாறாக, தொடர்ச்சியான பூமிப்பகுதி, அரசாங்க நிர்வாக எல்லைக் கோடுகள், வரலாறு பூர்வமான மக்கள் தொடர்பு, மொழி முதலிய காரணங்களின் விளைவாக, தேசீய இயக்கங்கள், விடுதலை இயக்கங்கள் தோன்றி சென்ற நூற்றாண்டில் பல பகுதிகளும் ஐரோப்பிய காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுப் பல தேசங்களும் தேசீய அரசுகளும் தோன்றின.

இந்திய நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டு நிலைபெற்ற போது இந்திய மக்களுடைய நலன்களை முன்வைத்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கத்திய சிந்தனைகளின் அடிப்படையில், இந்தியாவில் தேசீய இயக்கங்கள் தோன்றி, இந்திய தேசீய காங்கிரஸ் என்னும் தேசீய அமைப்பும் தோன்றி நிலைபெற்றது. இந்த இந்திய தேசீய காங்கிரஸ் அமைப்பு படிப்படியாக மக்களுடைய செல்வாக்கைப் பெற்று, இந்திய மக்களுடைய விடுதலைப் போராட்டத்தின் தலைமையாக முக்கிய தலைமையாக முன் நின்று, தனது வரலாற்றுப் பாத்திரத்தைச் செலுத்தியது.

இந்திய தேசீய விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியின் காலப்போக்கில் இந்திய தேசீயம் பற்றி, பாரதப் பண்பாட்டு தேசீயம், இந்திய தேசீயம், மொழிவழி தேசீயம், திராவிட தேசீயம், தமிழ் தேசீயம், போன்ற கருத்துப் போக்குகளும் வெளிப்பட்டன. குறிப்பாக மத அடிப்படையில் முஸ்லீம் தேசீயம் என்னும் கருத்து வலுப்பட்டு, நாடு சுதந்திரம் அடைந்தபோது இரண்டு நாடுகளாக இரண்டு அரசுகளாக, பின்னர் மூன்று அரசுகளாகப் பிரிந்து போயிற்று.

ஆனால் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தேசீய விடுதலை உணர்வு தீவிரமாக நாட்டு மக்களிடத்தில் பரவத் தொடங்கிய போது, மகாகவி சுப்ரமணிய பாரதி, பாரத தேசீயம் பற்றி தனது தேச பக்தப் பாடல்களில் புதிய கருத்துக்களை வெளியிட்டார். தேசபக்தியையும் தெய்வ பக்தியையும் இணைத்தார். பாரத தேசத்தை, பாரத மாதாவாக, மகா சக்தியாகக் கண்டார். நாடு பிரிவினையாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே சேதமில்லாத இந்துஸ்தானம் என்னும் கருத்தை வெளிப்படுத்தினார்.

இன்றும் பாரத தேசீயம் என்னும் கருத்து வடிவம் பற்றிய புரிதலில் பல நிஜங்கள் (உண்மை நிலைகள்) வெளிப்பட வேண்டியதிருக்கிறது. பலதப்பெண்ணங்கள் தீர்க்கப்பட வேண்டியதிருக்கிறது. பாரத தேசீயத்தின் அடிப்படையில், பாரத நாட்டு மக்கள் அனைவரும் முழுமையாக ஒன்றுபட்டு நின்று கட்டிப்பட வேண்டியதிருக்கிறது.

மகாகவி பாரதி தனது தேச பக்தப் பாடல்களைச் சிறு நூலாக வெளியிட்ட போது அதன் முன்னுரையாக பகவான் ஸ்ரீகிருஷ்ணன், அர்ஜுனனுக்கு தனது விஸ்வரூபத்தைக் காட்டி ஆத்ம நிலையை விளக்கியதொப்ப, எனக்கு எனது குருமாமணி பாரத தேசத்தின் பேருருவத்தைக் காட்டியுள்ளார் என்று குறிப்பிடுகிறார். அதற்கொப்ப மகாகவி பாரதி பாரத தேசத்தின், பாரத தேசீயத்தின் பேருருவத்தைத் தனது தேச பக்தப் பாடல்களில் நமக்குக் காட்டுகிறார்.

மார்கழி மாதப் பனியில், அதிகாலையில் எழுந்து நாம் வெளியே செல்லும் போது, சூரியோதயத்தின் போது, வெளியில் புல் வெளியில் ஒரு அருகம்புல்லின் நுனியில் படிந்திருக்கும் பனித் துளியில் காலைச் சூரியனின் முழுவட்டம் காணப்படுவதைப் போல, மகாகவி பாரதி, காட்டியுள்ள பாரத தேசீயத்தின் முழுவடிவத்தை இந்தச் சிறு நூலில் எடுத்துக் காட்டுவதற்கு முயற்சி செய்துள்ளேன். பாரத தேசீயம் மகா சக்தி வாய்ந்த பெருவடிவம். ஸ்ரீகிருஷ்ணனின் விஸ்வரூபதரிசனத்திற்கு ஒப்பானது.

அந்தப் பெருவடிவத்தை நமது மனதில் பதிய வைக்க முயல வேண்டும். இந்தச் சிறு நூலை எழுதுவதற்கு அருள் புரிந்த பாரதத் தாயை வணக்குகிறேன். அதற்கு வழிகாட்டியாக இருந்த பாரதியின் ஆதர்சத்தைப் பணிந்து போற்றுகிறேன்.

இந்த நூலை எழுதுவதற்கு ஊக்கமளித்து, உதவி செய்து அச்சிட்டு வெளியிட உதவிய எனது நண்பர்கள், சகோதரர்கள் அனைவருக்கும் எனது பணிவான அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறு நூல் பாரத நாட்டின் இளைஞர் அனைவரின் கைகளில் தவழச் செய்ய அனைவரையும் வேண்டுகிறேன்.

– அ. சீனிவாசன்



# பாரதியின் தேசீயம்

நூலாசிரியர் : அ. சீனிவாசன்

## 1. தோற்றுவாய்:

பாரதியின் தேசீயம், நமக்கு ஒரு புதிய காட்சியைக் காட்டுகிறது. ஒரு புதிய பார்வையைக் கொடுக்கிறது. பாரதியின் தேசீயம் பாரத தேசீயம். அது தேச பக்தியும் தெய்வ பக்தியும் இணைந்தது. வலுவான ஆன்மீகபலம் கொண்டது.

பாரதியின் தேசீயம் என்பது நமது மலைகளும் ஆறுகளும், கடலும் இதர இயற்கை வளங்களும் நிறைந்தவை. அது நமது மக்களின் நமது விலங்கினங்களின் பறவையினங்களின் மரங்களின் இலைகளின் சின்னமாகும்.

இமயத்தின் உச்சியில் கைலாய மலையும், அதன் உயரங்களில் பத்ரிநாதரும் கேதார் நாதரும் நாம் வணங்கும் தெய்வங்கள் அம்மலைத் தொடர் புனிதமான தெய்வீகத்தன்மை கொண்டது. இன்றும் திருவேங்கடமும் சோலைமலையும் நமது தெய்வீகத் திருப்பதிகள் தமிழகத்தின் குன்றங்கள் அனைத்தும் குமரன் வாழுமிடங்கள்.

நமது மலைகளில் தோன்றி பொங்கி வரும் நமது ஆறுகள் எல்லாம் வெறும் குடிநீர் சாதனங்கள் நீர்ப்பாசன சாதனங்கள் மட்டுமல்ல. அவை நாம் வணங்கிப்போற்றும் தெய்வங்கள். நமது விருட்சங்கள் எல்லாம் தெய்வீகத்தன்மை பொருந்தியவை. கோவில்களில் ஸ்தல விருட்சங்களாகப் போற்றிப் பாதுகாக்கிறோம். நமது ஆவினம் தெய்வீகத்தன்மை கொண்டது. நமது காளைகள் சிவபெருமான் வாகனம். சிங்கமும், புலியும் நமது துர்க்கையின், ஐயப்பனின் வாகனங்கள். நமது மயிலும், சேவலும் கருடனும் நமது நாட்டின் தெய்வீகப் பறவைகள் இவையெல்லாம் நமது தேசீயத்தின் சின்னங்களாகும்.

நமது முன்னோர்கள் ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், இசை மேதைகள், அறிவியல் வல்லுநர்கள், சிற்பிகள், இயல் இசை நாடகப் படைப்பாளிகள், நமது தலை சிறந்த நூலோர்கள், நமது அருங்கோயில்கள், கோபுரங்கள், குளங்கள், ஏரிகள் இதர நீர் நிலைகள், கல்வி நிலையங்கள், குருகுலங்கள், பல்கலைக் கழகங்கள், நமது தொழில்கள், சாகுபடி, கால்நடைப்பண்ணைகள், நமது சாலைகள், அரசியல், பொருளாதார தத்துவ ஞான மேதைகள், ஞானிகள் முதலியனவெல்லாம், நமது பாரம்பரியமான செல்வங்களாகும். இவையெல்லாம் பாரதத்தின் பெருமைகளும் வரலாற்றுச் சிறப்புகளுமாகும். நமது வீரர்கள் புகழ் மிக்கவர்களும் தர்மத்தின் வழியில் நின்றவர்களுமாகும். இவையெல்லாம் நமது தேசீயத்தின் மரபுகளாகும்.

பாரதியின் தேசீயம் என்பது, மேலைநாடுகளின் கருத்துக்களில் கூறப்படுவதைப் போல வெறும் பூகோள எல்லைக் கோடுகளையும், அரசியல் நிர்வாகப் பிரிவுகளையும், பொருளாதாரச் சந்தைகளையும் மட்டும் கொண்ட தேசீயம் போன்றதல்ல.

பாரத தேசம் என்பது மிகப் பழைமையான, நீண்ட பாரம்பரியத்தையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும், வரலாற்றுச் சிறப்புகளையும், சிந்தனைவழி முறைகளையும் அறிவுத்துறையின் தொடர்ச்சியான செயல்பாட்டு முறைகளையும், வளர்ச்சியையும் கொண்டதாகும். பழமை மிகுந்திருந்தாலும் இளமையோடு நீடிக்கும் ஒரு ஆன்மீக பூமியாகும்.

எத்தனையோ ஆட்சிகளும் அரசியல் நிர்வாகங்களும் தோன்றி மறைந்தாலும் பாரத மக்கள் பாரதத்தின் ஒன்றுமை உணர்வையும், இமயம் முதல் குமரி வரையிலுமான தொடர்பு இணைப்புகளையும் தொடர்ச்சியான இணைப்பான செயல் பாடுகளையும் கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள். பாரதத்தின் ஒரு பண்பாடு வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என்பதாகும். அது ஒரு நெறிமுறையாக வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. அதே சமயத்தில் அதன் பொருள் அன்னியத் தன்மைக்கு விட்டுக் கொடுத்து விடுவது என்பதல்ல. நமது வேற்றுமையில் ஒற்றுமை என்பது உயிர் இணைப்பு கொண்டது.

அது வெவ்வேறு மரக்குச்சிகளை, விறகுக் கட்டைகளை ஒன்று சேர்த்துக் கட்டுவதைப் போன்றதல்ல.

பாரதி தனது பாடல்களில் மிக அருமையாகக் கூறுகிறார். பாரதத்தாய் முப்பது கோடி (கோடி கோடி – இப்போது நூறு கோடி) முகமுடையாள், உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள், இவள் செப்பு மொழி பதினெட்டுடையாள், எனிற் சிந்தனை ஒன்றுடையாள், என்றும் நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி நயம் புரிவாள் எங்கள் தாய், அவர் அல்லவராயின் அவரை விழுங்கிப் பின் ஆனந்தக் கூத்திடுவாள் என்றும் எங்கள் தாய் என்னும் தலைப்பில் பாரதி பாடல் அமைந்திருப்பதைக் காணலாம்.

பாரதக் கலாச்சாரத்தையும் மரபுகளையும் வரலாற்றுப் பாரம்பரிய இணைப்பையும் தொடர்ச்சியையும் இந்து தர்மம் என்று குறிப்பிடுகிறோம். இது இஷ்ட பூர்வமான இணைப்பாகும். இது பலவகை வழிபாடுகளையும் பழக்கவழக்கங்களையும் நடை உடைபாவனைகளையும் கொண்ட சங்கமமாகும். இதில் கட்டாய மத மாற்றங்களுக்கும் நவீன மதக்கட்டுப்பாடுகளுக்கும் பதிவுகளுக்கும் ஆணைகளுக்கும், தேவ அனுமதிகளுக்கும் இடமில்லை. இந்த தர்மம், அறிவு புலனறிவு, ஆறறிவு, ஆய்வறிவு, அனுபவ அறிவு, ஆன்மீக அறிவு, ஆத்ம ஞான அறிவு ஆகியவை கொண்டதாகும்.

இந்த நூற்றாண்டில் உங்கள் அனைவரையும் என்னுடைய மதத்தில் பதிவு செய்வேன். அதற்கு எவ்வளவு பணம் செலவானாலும் சரி, எத்தனை தியாகம் செய்ய வேண்டியதாயினும் சரி என்று யாராவது கூறினால் அது வன்முறைச் சொல்லாகும். அது ஆக்கிரமிப்பானதாகும். அது அக்கிரமமானதாகும். அது கொடுமையானதாகும். அது அரக்கத்தனமானதாகும். அந்த முயற்சிகள் வீணானதாகும். அந்த முயற்சிகளை அந்த வன்முறைகளை பாரதம் தனது ஆன்மீக பலம் கொண்டு தகர்த்தெரிந்து விடும். அந்த ஆக்கிரமிப்பு முயற்சிகளை அந்த அநாகரிகமான வன்முறைகளை நமது கோதண்டமும், காண்டீபமும், சக்கராயுதமும், திரிசூலமும், வேலாயுதமும் கதைகளும் தூள் தூளாக்கிவிடும்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பாரத சமுதாயத்திற்கெதிராக அதன் பாரம்பரியத்திற்கும் கலாச்சாரத்திற்கும் எதிராக அதன் அனைத்துத் துறைகளுக்கும் எதிராகப் பல ஆக்கிரமிப்புகளும் வன்முறைக் கொடுமைகளும் நிகழ்ந்துள்ளன. அதனால் பல தீங்குகளும், சேதங்களும் படுகாயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் தீங்குகளையும் சேதங்களையும், படுகாயங்களையும், புண்களையும் போக்கி ஆற்றுவதும் பாரத நாட்டைப் புதுப் பொலிவுடன் மேம்படுத்திக் கொண்டு வருவதும் பாரத தேசீயத்தின் முன்புள்ள முக்கியமான பணியாகும்.

ஆங்கிலக் கல்வி நமது பண்பாட்டைப்பெரும் அளவில் சேதப் படுத்தியிருக்கிறது. அந்த ஆங்கிலக் கல்வியைப் பற்றியும், அக்கல்வி நமது நாட்டில் விளைவித்துள்ள சேதங்களைப் பற்றியும் செய்துள்ள தீமைகளைப் பற்றியும் பாரதியார் குறிப்பிடும் போது,

**"செலவு தந்தைக் கோராயிரம் சென்றது**

**தீது எனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன**

**நலம் ஓர் எட்டுணையும் கண்டிலேன் இதை**

**நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன்,"**

என்று கூறி, "இந்தப் பேரிருளில் விழுந்து அழிந்திடாது ஒருவாறு பிழைத்தேன்" என்றும் கூறி முடிக்கிறார்.

இலங்கையில் அரக்கர் கோன் மகன், தமது கொடுங்கணைகளால் மாயப் போர் நடத்தி, யாரும் அறியாத நேரத்தில் மறைமுகமாக நின்று நான்முகன் படையை ஏவி விட இலக்குவனும் வானரப்படைகளும் காயமுற்று போர்க்களத்தில் சாய்ந்து விழுந்த போது,

அனுபவம் மிக்க வீடணனும், ஆற்றல் மிக்க அனுமனும், அறிவின் மிக்க ஜாம்பவனும் கலந்து பேசி உயிர் காக்கும் மூலிகைகள் நிறைந்த சஞ்சீவி மலைக்குச் சென்று மருத்துவ இலைகளைக் கொண்டு வரத் தீர்மானித்தனர்.

மருத்துவ மலையின் மருத்துச் செடிகளின் சிறப்புகளைப் பற்றிக் குறிப்பிடும் போது ஜாம்பவன்,

**"மாண்டாரை உய்விக்கும் மருந்தொன்றும்**
**மெய்வேறு வகிர்களாகக்**
**நீண்டாலும் பொருந்துவிக்கும் ஒரு மருந்தும்**
**படைக் கலன்கள் கிளர்ப்பது ஒன்றும்**
**மீண்டேயும் தம் உருவே அருளுவதோர்**
**மெய் மருந்தும் உள, நீ வீர!**
**ஆண்டு ஏகிக் கொணர்தி, என அடையாளத்**
**தோடும் உரைத்தான் அறிவின் மிக்கான்**

என்று அனுமனிடம், அத்தகைய சிறப்பு மிக்க மருத்துவ மலையில் உள்ள மருந்துச் செடிகளைக் கொணரும் படி கூறினான்

வாயு புத்திரன், வல்லமையும் பேராற்றலும் மிக்க அந்த ஆஞ்சநேயன் வாயு வேகத்தில் வேகமாக மேரு மலையை நோக்கிச் சென்றான். அதற்கப்பால் உள்ள சஞ்சீவி மலையைக் கண்டான். இங்கு நின்று கொண்டு இன்ன மருந்து என்று கண்டு கொள்ள நேரமில்லை என்று கருதி, மாருதி சஞ்சீவி மலையை வேரோடு எடுத்துக் கொண்டு வேகமாகத் திரும்பினான்.

சஞ்சீவி மலையை அனுமன் கொண்டு வந்து விட்டான். மருத்துவ மலையின் மூலிகைக் காற்றுப் பட்ட உடனே, மாண்டு கிடந்த இலக்குவனும் வானரப்படைகளும் உயிர் பெற்று எழுந்தனர். அவர்களுடைய உடல்களில் பாய்ந்திருந்த ஆயுதங்கள் நீங்கின. அங்கங்கள் இணைந்தன. காயங்கள் மறைந்தன. தழும்புகள் நீங்கி அனைவருக்கும் பழைய நிலைக்கு உடம்புகள் கூடின. அனைவரும் மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்தனர். அது போல,

அன்னிய ஆட்சியால், ஆக்கிரமிப்பால், படையெடுப்புகளால், போர்களால், கொள்ளைகளால், படுகொலைகளால், கொடுங்கோன்மையால், வன்முறை ஆட்சியால், பாதிக்கப் பட்டு, சேதமடைந்து, படுகாயமடைந்து சிதைந்து போயிருந்த பாரத

சமுதாயத்தில், தேசபக்தி என்னும் நவீன மார்க்கம் தோன்றி நாட்டில் ஒரு புதிய ஆதர்சம், ஓர் கிளர்ச்சி ஓர் தர்மம் தோன்றி வளர்ந்தது. அதுவே பாரதியின் தேசீயமாகும். அந்த தேசீயம் தோன்றி வளர்ந்த போது, பாரத மக்களிடம் ஒரு புதிய உத்வேகம் ஏற்பட்டது. பண்டைய பாரதத்தின் பல சிறப்புகளும், உயிர்த்துடிப்புடன் புத்துயிர் பெற்று எழத் தொடங்கியது. பாரதத்தின் அறிவித்துறை வேகமாக மேம்படத் தொடங்கியது. பழைய காயங்கள். புண்கள், தழும்புகள் மறையத் தொடங்கின. அனுமன் கொண்டு வந்த சஞ்சீவி மலையின் பல சிதரல்கள் பாரதம் முழுவதிலும் சிதரி அவை நமது ஆரோக்கியத்திற்குத் தெம்பூட்டிக் கொண்டிருக்கிறது.

அனுமனும் சஞ்சீவி மலையும் பாரத நாட்டின் ஆன்மாக்கள் அனுமன் பாரத மக்களின் மகாவடிவம். அனுமனைப் போன்ற ஒரு பெரு வடிவத்தையும், சஞ்சீவி மலையைப் போன்ற ஒரு அருங்காட்சியையும் உலகின் வேறு எந்த இலக்கியத்திலும் காண முடியாது. அவை பாரதத்தின் சிறப்புகளாகும். அவை பாரதத்திற்கே உரியதாகும். பாரதத்திற்கே உரிய தேசீய அடையாளமாகும்.

பாரதியின் கவிதைகளில், பாரதியின் தேசீய சிந்தனைகளில் இந்தப் புதிய ஆதர்ஸங்களும் தேசீயமும் வெளிப்படுகின்றன. அவைகளை இந்த நூலில் எடுத்துக் காட்ட முயற்சிக்கப் பட்டிருக்கின்றன.

பாரதி தனக்குத் தனது குருமணி, பாரத தேசத்தின் பேருருவைப் பெருவடிவத்தைக் காட்டியதை, ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விஸ்வரூபம் காட்டி ஆத்ம நிலையை விளக்கிக் காட்டியதை ஒப்பிட்டு எடுத்துக் கூறுகிறார்.

ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்த ஸ்ரீமத் பகவத் கீதை உலகிலேயே மிக உயர்ந்த முதல் நிலையிலான பேரிலக்கியமாகும். தெய்வீகப் பேருரையாகும். ஆன்மீகமும், தத்துவ ஞானமும், அரசியல் தத்துவமும், சமூகவியல் தத்துவமும் நிறைந்த ஒரு புனிதமான பேரிலக்கியமாகும். ஸ்ரீமத் பகவத் கீதைக்கு பாரத நாட்டில் ஏராளமான பாஷ்யங்களும், விளக்கங்களும் விரிவுரைகளும் கூறப்பட்டிருக்கின்றன. நாள்தோறும் அவை மக்களிடம் கூறப்பட்டு பிரபலப்பட்டு வருகின்றன.

அந்தப் புனிதப் பேரிலக்கியத்தின் மணி முடியாக ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் விஸ்வ ரூப தரிசனம் (உலகப்பெருவடிவம்) அமைந்துள்ளது. பகவத் கீதையின் 11–வது அத்தியாயம் விஸ்வரூப (உலகப் பெருவடிவ) தரிசனமாகும். இந்த அத்தியாயம் முழுமையாக இந்த நூலில் எடுத்துக் காட்டாகக் கூறப் பட்டிருக்கிறது.

உலகம் முழுவதும் ஸ்ரீகிருஷ்ணனின் வடிவம் என்பதும், ஸ்ரீகிருஷ்ணனே உலகப்பெருவடிவம் என்பதும் நமது கடவுட் கொள்கையாகும். காயிலே புளிப்பதும், கனியிலே இனிப்பதும் கண்ண பெருமானே என்பது பாரதி வாக்கு. உலகம் முழுவதும், உலகில் உள்ள அத்தனை பொருள்களும் உயிர்த் தொடர்புடன் கூடிய இணைப்பு கொண்டதாகும் என்பது நமது தத்துவ நிலையாகும்.

நம்மாழ்வர் பெருமான்,

**"புகழு நல் ஒருவன் என்கோ**
**பொருவில் சீர் பூமி யென்கோ**
**திகழும் தண் பரவை யென்கோ**
**தீயென் கோ! வாயு வென்கோ!**

**நிகழும் ஆகாச மென்கோ**
**நீள்சுடர் இரண்டு மென்கோ**
**இகழ்விலிவ் வனைத்தும் என்கோ**
**கண்ணனைக் கூவு மாறே!"**

என்று பாடுகிறார்.

இன்னும் குன்றங்கள் (மலைகள்) மாரி (மழை) தாரகைகள் (நட்சத்திரங்கள்) நாவியல் கலைகள், ஞான நல்லாவி, சாதி மாணிக்கம், சவிகொள் பொன் முத்தம், சாதி நல்வயிரம், ஆதியஞ்சோதி, ஆதியம்புருடன், அடியவர் வினை கெடுக்கும் நச்சு மாமருந்தம், நலங்கடல் அமுதம், அச்சுவைச்கட்டி, அறுசுவை அடிசில், நெய்ச்சுவைத்தேரல், கனி, பால், நான்கு வேதப் பயன், சமய நீதி நூல், நுடங்கு கேள்வி, இசை, வினையின் மிக்க பயன்,

வானவர் ஆதி, வானவர் தெய்வம், வானவர் போகம், வானவர் முற்றும், ஊனமில் செல்வம், ஊனமில் சுவர்க்கம், ஊனமில் மோக்கம், (இங்கு ஊனமில்லாத செல்வம், சுவர்க்கம், மோட்சம் என்று ஆழ்வார் குறிப்பிடுவதைக் கவனிக்கவும்) இன்னும் நளிர் மதிச்சடையன், நான்முகக் கடவுள், உலகமெல்லாம் படைத்தவை எல்லாமே கண்ணன் (கடவுள்) மயம் என்றும், மேலும்,

**யாவையும் எவரும் தானாய்**

**அவரவர் சமயந்தோறும்**

**தோய்விலன் புலன் ஐந்திற்கும்**

**சொலப்படான் உணர்வின் மூர்த்தி**

**ஆவிசேர் உயிரின் உள்ளால்**

**ஆது மோர் பற்றில்லா**

பாவனை கொண்டவன்'' என்றெல்லாம் சிறப்பாக எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம்.

இது ஒரு மிக உயர்ந்த தத்துவ நிலையாகும். இவ்வாறு உலகமனைத்தையும் கண்ணன் வடிவத்தில் காண்பதைப் போல பாரத மாதாவின் மிக உயர்ந்த மிக மேலான வடிவத்தை பாரதத்தின் முழுமையான வடிவத்தை பாரதி காண்கிறார். அதுவே பாரதியின் தேசீயமாகும். அந்தத் தேசீயத்தின் முழுமையை முழுமையான உள்ளடக்கத்தையும் வெளிப்பாடுகளையும் அவருடைய தேச பக்தப்பாடல்களில் காண்கிறோம்.

அப்பாடல்களின் கருத்துக்களும், கருத்து வடிவங்களும், பாடல் வரிகளும் இந்த நூலில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

“ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில் தான் இந்த நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக இமயம் முதல் குமரி வரையில் ஆப்கானிஸ்தானத்தின் கிழக்கு எல்லை முதல் பர்மா (மியன்மார்) வின் மேற்கு எல்லை வரை ஒரே ஆட்சி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து அரசியல் பூர்வமாக இந்தியா என்னும் தேசத்தை உருவாக்கினார்கள்.'' என்று சில ஆங்கிலேய சிந்தனையாளர்கள்

கூறி வருகிறார்கள். ஆங்கிலேய ஆட்சி காலத்தில் இந்தியர்கள் தங்கள் உரிமைகளுக்காக கோரிக்கை மனுக்கள் கொடுக்க இந்திய தேசீய காங்கிரஸ் அமைப்பு உருவாயிற்று. அதன் தொடர்ச்சியாக பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து நடந்த சுதந்திரப் போராட்டத்திலும் அந்த இந்திய தேசீயக் காங்கிரஸ் பங்கு கொண்டு, இந்திய தேசீயத்தை வளர்த்தது. அப்போது இந்திய தேசிய காங்கிரஸில் பல பிரிவுகளும் போக்குகளும் இருந்தன.

இந்திய தேசீய காங்கிரஸ் தலைமையில் பெரும்பாலும் ஆங்கில சிந்தனையாளர்களே அதிகமாக இருந்தார்கள். எனவே காங்கிரஸ் தேசீயத்தின் வடிவம் பெரும்பாலும் ஐரோப்பிய சிந்தனை வடிவத்திலேயே அமைந்திருந்தது. இந்தக் காலத்தில் பாரதியின் தேசீய சிந்தனை வடிவம் முற்றிலும் மாறுபட்ட இந்திய பாரம்பரிய வடிவில் வெளிப்பட்டது. அந்த விவரங்கள் இந்த நூலில் கூறப் பட்டிருக்கின்றன.

இந்திய சுதந்திரப் போராட்டம் வளர்ச்சி பெற்று புதிய கட்டங்களை அடைந்த போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஆங்கிலேய அரசியல் நிர்வாகிகள் தங்கள் பிரித்தாளும் சூழ்ச்சிகள் மூலம் இந்திய தேசீய இயக்கத்தை மத அடிப்படையிலும் பிராந்திய அடிப்படையிலும் பிளவு படுத்த முயற்சித்தார்கள்.

1916–ம் ஆண்டில் தோன்றிய அகில இந்திய முஸ்லீம் லீக் 1940–ம் ஆண்டுகளில் இந்திய முஸ்லீம்களிடம் செல்வாக்கு பெற்று இந்திய தேசீய காங்கிரஸ் கூறுவது "இந்து" தேசீயம் என்றும் முஸ்லீம்களுக்கு அந்த தேசீயம் ஒத்துப் போகாது என்றும், முஸ்லீம் தேசீயம் தனியானது என்றும் பேசி, இரு தேசீயங்களின் அடிப்படையில் நாடு சுதந்திரம் அடைந்த போது, நாட்டின் பிரிவினை ஏற்பட்டு பாகிஸ்தான் அமைந்தது என்பது வரலாற்று விவரமாகும். அது பற்றியும் இந்த நூலில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

முஸ்லீம் தேசீயம் என்னும் கொள்கையின் படி பாகிஸ்தான் பிரிந்து சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் கிழக்கு பாகிஸ்தான் பகுதியில் முஸ்லீம் தேசீயம் உடைந்து, மொழிவழி அடிப்படையில் வங்க தேசீயம் என்று தோன்றி, பாகிஸ்தானிலிருந்து கிழக்கு

பாகிஸ்தான் பிரிந்து பங்களாதேஷ் உருவாயிற்று. அதன் காரணமாக முஸ்லீம் தேசீயம் என்பது உடைந்து போய் விட்டது.

1940–ம் ஆண்டுகளில் தென் இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் திராவிட தேசீயம் என்னும் கருத்தும் கிளர்ச்சியும் தோன்றியது. அவர்களும் பிரிவினை பேசினார்கள். தென்மாநிலங்களை இணைப்பதான திராவிட தேசீயம் வெற்றி பெறவில்லை. அது கூனிக் குறுகி தமிழ் தேசீயம் என்றாயிற்று. அதன் பிரிவினை வாதம் வெற்றி பெறவில்லை. தமிழ் மக்கள் அப்பிரிவினைக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே திராவிட தேசீயம் என்னும் கருத்து வடிவம் நீர்த்துப் போய் விட்டது. ஆயினும் அவை சிலருடைய சிந்தனையில் உறைந்து போய் அவ்வப் போது கருத்தளவில் வெளிப்படுகிறது. இதைத் தவிர பாரதத்தின் வேறு சில பகுதிகளில் மொழிவழி தேசீயம் அவ்வப்போது வெளிப் படுகின்றன. ஆனால் அவைகளுக்கு பொதுவாக மக்களிடம் ஆதரவில்லை.

கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்க சர்வ தேசீயம் என்று பேசினார்கள். அது நமது நாட்டில் எடுபடவில்லை. இன்னும் சொல்லப் போனால் அந்தப் பாட்டாளி வர்க்க சர்வ தேசீயம் என்பது எந்த நாட்டிலும் எடுபடவில்லை. அந்த சர்வ தேசீயம் பிறந்த ஐரோப்பாவிலேயே அது எடுபடவில்லை. கம்யூனிஸ்டு கட்சிகளே கூட பல நாடுகளிலும் தேசீய உணர்வு கொண்டே செயல் பட்டு வருகின்றன. இந்தியாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு தேசீய உணர்வில் தடுமாற்றங்களும் வீழ்ச்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இன்று உலகில் உள்ள பெரிய நாட்டின் பெரிய கட்சியாக, ஆளும் கட்சியாக உள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீன தேசீயத்தின் அடிப்படையிலேயே செயல்பட்டு வருகிறது. எனவே பாட்டாளி வர்க்க சர்வ தேசீயம் என்பது செயலிழந்து விட்டது. கருத்தளவிலும், தோல்வியடைந்து விட்டது.

இந்திய நாட்டில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் பல பிரிவுகளாக உடைந்து சிதறிக் கிடக்கின்றன. அவர்களுடைய சர்வ தேசீயமும் சரி, தேசீயமும் சரி, மொழிவழி தேசீய இனக்

கருத்துக்களும் சரி தோல்வியடைந்து விட்டன. செயலிழந்து விட்டன. அந்தக் கட்சிகளும் தங்கள் தனித்தன்மைகளை இழந்து கம்யூனிஸ்ட் கட்சிகள் என்னும் அடையாளத்தையும் இழந்து விட்டன. இதர சிறிய சில கட்சிகளைப் போலவே அவைகளும் செயல் பட்டு வருகின்றன.

மேற்கு வங்கத்திலும் மாநில ஆட்சிப் பொருப்பில் இருந்து வரும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தங்கள் தேசீயக் கருத்துக்களை இன்னதென்று தெளிவாகச் சொல்ல முடியாத நிலையில் உள்ளது.

எனவே இத்தகைய வரலாற்று அனுபவத்தில் பார்க்கும் போது பாரத நாட்டின் உண்மையான தேசீயம் என்பது அதன் கலாச்சார தேசீயமேயாகும். அதுவே சரியானதுமாகும் என்பது தெளிவாகிறது. இதில் பலரும் தங்களுடைய தப்பெண்ணங்களைத் தவிர்த்து உண்மை நிலையை ஏற்க வேண்டும்.

இவ்வாறு பாரத தேசீயம் என்பது பாரத நாட்டின் பாரம்பரியத்தின் படியான கலாச்சார தேசீயமே என்பதற்கு மகாகவி பாரதியின் பாடல்களும், கவிதைகளும் நமது ஆதாரமாக அமைந்துள்ளன. நமது பாரத தேசீயம் தேச பக்தியும் தெய்வ பக்தியும் இணைந்தது என்பதையும் அரசியலும் ஆன்மீகமும் இணைந்தது என்பதையும் இந்த நூல் விளக்கிக் கூறுகிறது.

நமது கலாச்சார தேசீயம் என்பது நமது உள்ளங்களில் நன்கு பதிய வேண்டும். உணர்வு பூர்வமாகப் பதிய வேண்டும். பாரத புத்திரர்கள் ஒவ்வொருவரின் கருத்துக்களிலும் நன்கு பதிய வேண்டும். அதில் நாம் பெருமை கொண்டு பெருமிதம் அடைய வேண்டும்.

## 2. பாரத நாட்டில் தேசீய இயக்கங்கள்

தேசீயம் என்பது பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில், தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, சந்தை, அரசியல் எல்லைக் கோடுகள், மன்னராட்சி அதிகாரங்கள் மங்கி, மக்களாட்சி முறையும் அதற்குரிய அரசியல் சாசனங்களும் தோன்றிய மேற்கு நாடுகளில் ஒரு தத்துவமாக ஒரு கருத்து வடிவமாக வெளிப்பட்டது. ஐரோப்பா முழுவதிலும் பரவியிருந்த கத்தோலிக்க மதத்தலைமையும் உடைந்து தேசீய எல்லைகளுக்குட் பட்ட மத நிறுவனங்களும் தோன்றி நிலை பெற்றன.

பாரத நாட்டில் தேசீயம் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி காலத்தில் இந்திய தேசீய காங்கிரஸ் என்னும் பெயரில் ஒரு தேசீய மகாசபை என்று பெயர் பெற்று தோன்றி வளர்ச்சியடைந்தது. இந்த இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை, நாட்டில் இருந்த ஆங்கில கல்வியாளர்களின் மேல் நாட்டு சிந்தனைப் போக்கிலிருந்தே தோன்றி வளர்ந்தது என்று கூறலாம்.

ஏற்கனவே, மொகலாய ஆட்சியின் கடைசி காலத்தில் குறிப்பாக ஔரங்க சீப்பின் ஆட்சி காலத்தில் அந்த ஆட்சியின் கொடுங்கோன்மைக்கு எதிராக சிவாஜி மகாராஜ் தலைமையிலும், குருகோவிந்த சிம்மர் தலைமையிலும் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டு பாரதத்தின் பண்டைய பாரம்பரியப் பெருமைமிக்க ஒரு புதிய தேசீய உணர்வு கருக் கொண்டு வளரத் தொடங்கியது.

ஆங்கிலேயர்கள் தங்கள் வியாபாரக் கம்பெனிப் படைகளைக் கொண்டு பாரதம் முழுவதையும் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்கு ஒரு நூற்றாண்டு காலம் பிடித்தது. 1757-ம் ஆண்டு நடைபெற்ற பிளாசி யுத்தம் தொடங்கி 1857-ம் ஆண்டு வரை பிரிட்டிஷ் கம்பெனிப் படைகள் எண்ணற்ற படுகொலைகளையும், ஆக்கிரமிப்புப் போர்களையும் நடத்தின. இந்த அன்னிய ஆக்கிரமி ப்புப் போர்களில் அன்னிய ஆங்கிலேயர்களை எதிர்த்து இந்திய மக்கள் வீரதீரமாகப் போரிட்டார்கள். அந்தப் போராட்டங்களின்

முடிவாக 1857–ம் ஆண்டில் முதலாவது சுதந்திரப் போராட்டம் நாடு தழுவிய பெரும் போராட்டமாக வரலாற்றில் இடம் பெற்றது. இந்தப் போராட்டங்களும் பாரத நாட்டின் பாரம்பரியமான தேசீய உணர்வை ஆங்காங்கு வெளிப்படுத்தின. அக்காலத்தில்தான் பக்கிம் சந்திரரின் ஆனந்தமடமும், சந்நியாசிகள் இயக்கமும் வந்தே மாதர கீதமும் வெளிப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய தேசீய விடுதலைப் போராட்டத்தில் புதிய பிரிவுகளும் சிந்தனைப் போக்குகளும் வெளிப்பட்டன. இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை சார்பில் வெறும் மனுக்களும் விண்ணப்பங்களும் கொடுத்துக் கொண்டிருந்த நிலை மாறி புதிய பல வகையான தீவிரப் போராட்ட முறைகளும் எழுந்தன.

லோக மான்ய பால கங்காதரத் திலகர், லாலா லஜபதி ராய், வீர சாவர்க்கார், அரவிந்தர், விபின் சந்திரபால்,

தெற்கில் வ.உ.சிதம்பரம் பிள்ளை, வா.வே.சு. அய்யர், சுப்ரமணிய சிவா, வீரவாஞ்சி, சுப்ரமணிய பாரதி முதலியோர் புதிய தீவிர இயக்கங்களின் பிரதிநிதிகளாக வெளிப்பட்டனர்.

இந்திய தேசீய இயக்கங்களும் இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபையும் புதிய பரிமாணங்களை எட்டியது. இருபதாம் ஆண்டுகளில் மகாத்மா காந்தியின் தலைமையில் இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை ஒரு மக்களியக்கமாக மலர்ந்தது. இந்திய தேசீயத்தின் பொருளும், கருத்து வடிவமும் விரிவுப் பட்டது.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் இந்திய தேசீய காங்கிரஸில் ஒரு பக்கம் மகாத்மா காந்தி தலைமையும் மறு பக்கம் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் தலைமையும் கொண்ட இரு திசை வழிகள் வெளிப்பட்டன.

இதே காலத்தில் இந்திய தேசீய இயக்கங்களில் சில எதிர் மறைப் போக்குகளும் பிரிவினைப் போக்குகளும் வெளிப்பட்டன.

இரண்டாம் உலகப் போர் முடிந்த போது, உலகெங்கும், காலனி நாடுகளில் தீவிரமான சுதந்திரப் போராட்டப் பேரொலி வெளிப்பட்டு பல நாடுகளும் ஐரோப்பிய காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு பல சுதந்திர நாடுகள் தோன்றத் தொடங்கின.

தேசீய சுதந்திரம் பற்றிய கருத்துக்களும் கருத்து வடிவங்களும் விரிவு பட்டன.

பாரத நாட்டில் 1945–46–ம் ஆண்டுகளில் மிகப் பெரிய அளவில் சுதந்திர எழுச்சி ஏற்பட்டது. இந்திய நாட்டிற்கு சுதந்திரம் கொடுத்தாக வேண்டும் என்னும் கட்டாயம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஏற்பட்டது. அப்போது இந்திய தேசீய காங்கிரஸின் தேசீயக் கருத்துக்கள் முன்னுக்கு வந்தன.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த பூகோளப் பகுதிகளை இந்திய தேசம் என்றும், அதன் உணர்வு நிலையாக இந்திய தேசீயமும், தேசீயக் கருத்துக்களும் வெளிப்பட்டன. இந்த தேசீயம் பெரும் பாலும் ஐரோப்பிய சிந்தனை அடிப்படைலேயே உருவாயிற்று. இந்தியாவின் பூகோள அமைப்பு, அரசியல் எல்லைக் கோடுகள், மக்கள் பிரிவுகள், அடிப்படையிலேயே அந்த தேசீயம் விளக்கப் பட்டது. இந்தியா என்பது எப்போதும் ஒன்றாக ஒன்று பட்டு இருந்ததில்லை என்றும் ஆங்கிலேயர்கள்தான் இந்தியாவை பூகோள ரீதியிலும் அரசியல் அடிப்படையிலும் ஒன்று படுத்தி, இந்திய தேசம் என்று ஒன்றை உருவாக்கினார்கள் என்றும் பேசப் பட்டது. இன்றும் கூட அக்கருத்துக்கள் பேசப் படுகின்றன.

இந்திய தேசீய காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கூறிய தேசீயத்தை அன்றைய அகில இந்திய முஸ்லீம் லீக் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எதிர்த்தார்கள். இந்திய தேசீயக்

காங்கிரஸ் கட்சி கூறும் தேசீயம் இந்து தேசீயம் என்றும், இந்தியாவில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு அந்த தேசீயம் ஒத்துப் போகாது என்றும், முஸ்லிம்கள் தனிதேசம் என்றும் அவர்களது தேசியம் தனி தேசியம் என்றும் அது முஸ்லீம் தேசியம் என்றும் கூறியும், வாதிட்டும், அதனடிப்படையில் பாகிஸ்தான் பிரிவினை கோரிக்கையை முன் வைத்தும், போராட்டங்கள், கலவரங்கள், படுகொலைகளை, பாலியல் வன்முறைகள், கட்டாய மத மாற்றங்கள் நடத்தியும் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து அது தனி நாடாயிற்று.

இந்து என்பதும் இந்துத்வம் என்பதும் இன்று பலரால் தவறாகப் புரிந்து கொள்ளப் படுகிறது. அதற்கு அன்றைய தேசப் பிரிவினை இயக்கமும் ஒரு காரணமாகும்.

இந்து என்றாலும், இந்துத்வம் என்றாலும் அது மதத்தைக் குறிக்கும் சொல் அல்ல. இந்து அல்லது இந்துத்வம் என்றால் அது இந்து தர்மமாகும். அது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பயனீடுகளை அதாவது தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் புருஷார்த்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வாழ்க்கை நெறி முறையாகும். இது பாரதத்தில் வாழும் அனைவருக்கும் பொருந்துவதாகும். இந்தக் கருத்து விளக்கங்கள் இன்னும் தெளிவு பட வேண்டும். அதனால் தான் இந்து என்றாலே, இந்துத்வம் என்றாலே அது மதவாதம் என்றும், வகுப்புவாதம் என்றும் தவறாகப் புரிந்து கொள்ளப் படுகிறது.

பாகிஸ்தான் பிரிவினை வாதத்தையும் மத அடிப்படையில் முஸ்லிம் தேசீயம் என்றும் கருத்துக்களைப் பரப்பியதும் இந்திய மக்களிடையில் இன்னும் பல தவறான குழப்பமான கருத்துக்கள் நிலவக்காரணமாக இருந்து வருகின்றன. இந்து சமுதாயம் என்பது இந்துத்வம் என்பது பாரத நாட்டின் அனைத்து மக்களையும் உள்ளிட்ட ஒன்று பட்ட சமுதாயம் என்பதும் தெளிவாக உணரப்பட வேண்டும்.

பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிந்து இருபத்தைந்து ஆண்டுகளில் பாகிஸ்தான் தேசீயம் (இஸ்லாமிய தேசீயம்) உடைந்து மொழி வழி தேசியம் என்னும் பெயரில் பங்களாதேஷ் (கிழக்கு பாகிஸ்தான்) பிரிந்து அது ஒரு தனி நாடாகி விட்டதையும் கண்டோம்.

பாரத தேசம் சேதப்பட்டு, அதிலிருந்து பாகிஸ்தான், பங்களா தேஷ் என்று தனியான இஸ்லாமிய நாடுகளாகப் பிரிந்திருந்தாலும் இஸ்லாமிய தேசீயம் என்பது நிற்க வில்லை. அது உடைந்து சிதரி விட்டது. ஆயினும் அன்று முஸ்லிம்கள் தனி தேசம், தனி தேசீயம் என்று பரப்பப்பட்ட பிரிவினை வித்துக்கள் அடிப்படை மதவாதக் கருத்துக்கள் பாரத தேசீயத்தைப் பாதித்துப் பல குழப்பங்களை ஏற்படுத்தி வருகிறது. அதனால் அத்தகைய முஸ்லிம்கள் முழுமையாக இந்திய தேசீயத்துடன் இணைந்து கலந்து விட்டார்கள் என்று இன்று வரை உறுதியாகக் கூற முடியவில்லை.

## திராவிட தேசீயம்

1940–ம் ஆண்டுகளில் தென் இந்தியாவில் திராவிடர் இயக்கம் என்னும் பெயரில் தேசீய காங்கிரஸ் எதிர்ப்பு, இந்திய தேசீய எதிர்ப்பு, ஆரிய எதிர்ப்பு, வடமொழி எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு வடக்கு எதிர்ப்பு, வேத எதிர்ப்பு–வடவர் நம்மவரும் அல்ல, நல்லவரும் அல்ல என்றெல்லாம் வெறும் எதிர் மறைக் கருத்துக்களைப் பேசி, திராவிட தேசீயம் என்னும் கருத்தையும் கருத்து வடிவத்தையும் அவர்கள் முன் வைத்தார்கள். இந்திய நாட்டை இந்தியத்துணைக் கண்டம் என்று கூறினார்கள். இன்றும் கூட அவ்வாறு கூறி வருகிறார்கள்.

திராவிட நாடு பற்றிய விளக்கங்கள் கூறப்பட்ட போது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் பகுதிகளை இணைத்து மொழிவழி பிரிந்து இனவழி சேர்தலே திராவிட தேசீயம் என்னும் கருத்துக்கள் வெளிப்பட்டன. திராவிட தேசீயத்திற்கு

தமிழ் நாட்டைத் தவிர தென் இந்திய மாநிலங்களில் எந்த ஆதரவும் இல்லை. எனவே திராவிட கழகத்திலிந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்று பிரிந்த போது தமிழ் நாட்டை மட்டும் எல்லையாக வைத்து திராவிட நாடு தனிநாடு என்று தீர்மானம் போட்டார்கள். பின்னர் பிரிவினை என்பது கை விடப்பட்ட போது அல்லது பின் வாங்கப்பட்ட போது தமிழ் தேசீயம் என்றும், மாநில சுயாட்சி என்றும் கருத்துக்கள் சிதரி வெளிப்பட்டன. மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்று அரசியல் தேசீயம் பேசப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் உலக சமுதாயம், பாட்டாளி வர்க்க சர்வ தேசீயம் என்றெல்லாம் பேசிய போதிலும் தேசீய இனம் என்றும் மொழி வழி தேசீயம் என்றும் தேசீயம் பற்றிய கருத்துக்களைக் கூறிவருகின்றன.

இவ்வாறு இந்திய நாட்டில் தேசீயம் பற்றிப் பலவகையான கருத்துக்களும் கருத்து வடிவங்களும் விளக்கங்களும் வியாக்கியானங்களும் கூறப்பட்டு வந்திருக்கின்றன.

பாரதநாட்டில் அண்மைக்கால வரலாற்றில் தோன்றிய முஸ்லீம் தேசீயம் தகர்ந்துவிட்டது. திராவிட தேசீயம் நடைமுறையில் நீர்த்துப் போய்விட்டது. மொழிவழி தேசீயம் என்பது இந்திய தேசீய வட்டத்திற்குட்பட்டே மக்கள் மனதில் நிற்கிறது. இருப்பினும் இக்கருத்துக்களின் எச்சங்கள் நீடிக்கின்றன.

எனவே பாரத நாட்டின் தேசீயத்தின் மெய்யான வடிவத்தைக் காணவேண்டும். அதனடிப்படையில் பாரத நாட்டுமக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும். இந்துத்வ தேசீய ஒற்றுமை மூலம்தான் பாரத மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்த ஒற்றுமைப்படுத்த முடியும். இதற்கு மகா கவி சுப்ரமணிய பாரதியின் சிந்தனையின் வழிகாட்டுதல் நமக்கும் பெரிதும் உதவுகின்றன.

## 3. பாரதியின் சிந்தனையும் அனுபவமும்

பாரதியார் புதுச்சேரியில் 1910 முதல் 1919–வரை வாழ்ந்து வந்தார். அப்போது அவருக்கு நன்கு அறிமுகமாகியிருந்த ஸ்ரீ குஞ்சிதபாதம் அவர்கள் எழுதியிருந்த "பாரதி நினைவுகள் பற்றிய கட்டுரைகள் பாரதி நூற்றாண்டு விழாவின்போது ஒரு தனி நூலாக வெளிவந்தது. அந்த நூலுக்கு தமிழ் நாட்டின் மிகவும் பிரபலமான பேரறிஞர்களில் ஒருவரான டி.எம்.பி. மகாதேவன் ஒரு முன்னுரை எழுதியுள்ளார். அம்முன்னுரையில், "1907–ம் ஆண்டு வாராணசியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரசுக்குச் சென்றுவிட்டுப் பாரதியாரும் அவரோடு சில தென் இந்திய நண்பர்களும் கல்கத்தா வந்து ஸ்ரீ அனந்த மோகன் போஸின் மாளிகையில் சில நாட்கள் தங்கினார்கள். அப்போது ஒரு நாள் நிவேதிதா அம்மையார் அங்கு வந்திருந்தார்கள் அந்த மாளிகையின் வாயிலில் இருந்த ஒரு ஆலமரத்தின் அடியில் பாரதியாரை அழைத்துச் சென்று, பாரதமாதாவின் வானளாவிய திருவுருவத்தைக் காட்டினார். அதிலிருந்து அவ்வம்மையாரைத் தமது குருவாக பாவித்து வந்தார். இந்த விஷயத்தைச் சொன்னபோது தீக்ஷதருக்கும் அவருடைய மகனாருக்கும் (குஞ்சிதபாதம்) எப்படி ஒரு வெள்ளைக்கார மாது பாரதியாருக்கு குருவாக இருக்க முடியும் என்று வியப்பாக இருந்தது. ஆனால் நம்முடைய தேசீயம் மற்ற நாடுகளின் தேசீயம் போலல்ல என்பதைப் பாரதியார் உணர்ந்திருப்பதை, நிவேதிதா அம்மையாரைத் தம்முடைய குருவாக ஏற்றது காண்பிக்கிறதல்லவா?" என்று குறிப்பிடுகிறார். (அடிக்கோடிட்டுருப்பது என்னுடையது –நூலாசிரியர்)

மேலும் அந்த முன்னுரையில், "பாரதி சென்னையில் நடந்த காங்கிரஸ் கூட்டங்களில் தாமே பாடியும் ஸ்வதந்திர தாகத்தை மக்களுக்குப் புகட்டினார். இந்த சமயத்தில் ஸ்ரீ குஞ்சிதபாதம் சென்னைக்கு வந்து குடி புகுந்தார். அவர் தங்கியிருந்த வீட்டை அறிந்து கொண்டு அவ்வப்போது பாரதியார் அங்கு சென்று புதுவை நண்பர்களுடன் அளவாளாவுவது வழக்கம். எத்தனையோ

இன்னல்களுக்கும் நடுவே பாரதியார் தம்முடைய தேசப்பணியை ஆற்றினார். அதோடு ஆன்மீக வளர்ச்சியையும் ஏற்படுத்திக் கொண்டார். ஆன்மீகத்திற்கும் தேசீயத்திற்கும் முரண்பாடு இல்லையென்பதை நிரூபித்துக் காட்டினார். அத்வைத அனுபூதி தான் குறிக்கோள் என்பது உண்மையென்றாலும் இறைவணக்கம் கோவில் வழிபாடு முதலியவை அவசியமானவை என்பதையும் அவர்தம் நடத்தையிலேயே அனுஷ்டித்துக் காட்டினார்

..........................................................................................

..........................................................................................

அவருடைய பூதவுடல் மறைந்ததே ஒழிய புகழுடல் என்றும் மங்காது. உலகத்திற்கு ஒரு மகத்தான உண்மையைப் புலப்படுத்திக் கொண்டேயிருக்கும். அது என்னவென்றால் மனித வாழ்க்கையில் ஆதாரமாய் இருக்கவேண்டிய ஆன்மீக உணர்ச்சி தெய்வ பக்தி என்பதுதான் " என்று குறிப்பிடுகிறார்.

இதிலிருந்து தெரிவது பாரதியின் தேசீயம், பாரத தேசீயம். அது தேசபக்தியும் தெய்வபக்தியும் இணைந்த தேசீயமாகும் என்பது தெளிவாகும்.

இன்னும், தேசீய கீதங்களின் சமர்ப்பணத்தில் தன் குருவாகிய நிவேதிதா தேவியே அப்பாட்டுக்குக் காரண பூதமென்று புகழ்ந்து பெருமையுடன் பாரதியார் சமர்ப்பணம் செய்திருக்கிறார், என்று திரு. குஞ்சிதபாதம் எழுதுகிறார்.

1908–ம் ஆண்டில் முதன்முதல் வெளியான ஸ்வதேச கீதங்களின் சமர்ப்பணம் பின்வருமாறு:–

" ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விஸ்வரூபம் காட்டி ஆத்ம நிலையை விளக்கியதை ஒப்ப, எனக்கு பாரததேவியின் சம்பூர்ண ரூபத்தைக்காட்டி ஸ்வதேச பக்தியுபதேசத்தை புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலை சமர்ப்பிக்கிறேன்" என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

1909–ம் ஆண்டில் ஸ்வதேச கீதங்கள் 2–ம் பாகம் "ஜன்மபூமி" என்ற பெயரால் வெளியிடப்பட்டது. அதன் சமர்ப்பணமும் முகவுரையும் பின் வருமாறு.

எனக்கு ஒரு கடிகையிலே மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குருமணியும் பகவான் விவேகானந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை சமர்ப்பிக்கிறேன்" என்று குறிப்பிடுகிறார்.

பாரதியார் முன் வைத்துள்ள ஒப்பீடு:– ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விஸ்வரூபம் காட்டி ஆத்ம நிலையைக் காட்டிய தொப்ப எனக்கு பாரத தேவியின் சம்பூரண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தியுபதேசத்தைப் புரிந்தருளியதாகக் குறிப்பிடுகிறார். எனவே இங்கு ஸ்ரீகிருஷ்ணனுடைய விஸ்ரூபமும் பாரத தேவியின் சம்பூரண ரூபமும் ஒப்பிடப்படுகிறது.

## 4. ஸ்ரீகிருஷ்ணனுடைய விஸ்வரூப தரிசனம்

கண்ணன் அர்ஜுனனுக்குக் காட்டியது பரமாத்மாவின் விஸ்வரூபம் அதாவது உலகப் பெருவடிவம். பிரபஞ்சத்தின், அதாவது இந்தப்பேருலகின் முழுமையான தோற்றமாகும். அத்தோற்றத்தில் அனைத்து அண்டங்களும் அவைகளின் மலைகளும், ஆறுகளும் கடல்களும் மக்களும் தேவர்களும் விலங்குகளும் பறவைகளும் இதர ஜீவராசிகள் அனைத்தும் காணப்படுகின்றன. மனிதர் தேவர் உள்பட அனைத்து ஜீவராசிகளின் தோற்றங்களும் நிலைபாடுகளும் மாற்றங்களும் உயிர்த்துடிப்புடன் காணப்படுகின்றன.

பாரதியார் தனது பகவத் கீதை

தமிழாக்க நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் கடவுளின் தோற்றத்தைப் பற்றி அந்த அற்புதமான காட்சியைப் பற்றிக் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார். ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத் என்பது ஸநாதன தர்மத்தின் சித்தாந்தம். எல்லாம் கடவுள் மயம். எல்லாத் தோற்றங்களும், எல்லா வடிவங்களும், எல்லா உருவங்களும், எல்லாக் காட்சிகளும், எல்லாக் கோலங்களும், எல்லா நிலைமைகளும், எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும் எல்லா சக்திகளும், எல்லா நிகழ்ச்சிகளும் எல்லாச் செயல்களும், எல்லாம் ஈசன் மயம். (ஆதலால் எல்லாம் ஒன்றுக் கொன்று சமானம்) என்று குறிப்பிட்டு விளக்கிக் கூறுகிறார்.

விஸ்வரூப தரிசனம்

பகவத் கீதையின் 11–ம் அத்தியாத்தில் விஸ்வரூப தரிசனம் கூறப் படுகிறது.

"ஸ்ரீபகவான் சொல்லுகிறார்.

"பல நூறாகவும் பல்லாயிரமாகவும் வகை பல நிறம் பல அளவு பலவாகும் என திவ்ய ரூபங்களைப் பார், பார்த்தா–5

ஆதித்யர்களைப் பார், வசுக்களைப்பார், அசுவினி தேவரைப் பார், மருத்துக்களைப்பார், பாரதா, இதற்கு முன் கண்டிராத பல

ஆச்சரியங்களைப் பார் – 6.

அர்ஜுனா, இன்று இங்கே என் உடலில் சராசரமான உலகம் முழுதும் ஒருங்கு நிற்பதைப் பார். இன்னும் வேறு நீ எதைக் காண விரும்பினும் அதை இங்கு காண் – 7.

உன்னுடைய இயற்கையின் இக்கண்களால் என்னைப் பார்க்க முடியாது. உனக்கு ஞானக் கண் கொடுக்கிறேன். என்னுடைய ஈசுவர யோகத்தைப் பார் – 8.

சஞ்சயன் சொல்லுகிறான்:–

அரசனே இவ்வாறு உரைத்து விட்டு அப்பால் பெரிய யோகத் தலைவனாகிய ஹரி, பார்த்தனுக்கு மிக உயர்ந்த தன் கடவுள் வடிவைக் காட்டினான் – 9.

(அவ்வடிவம்) பலவாய்களும் பல விழிகளும் உடையது. பல அற்புதக் காட்சிகளை உடையது. பல திவ்யா பரணங்கள் பூண்டது. பல தெய்வீகப் படைகள் ஏந்தியது – 10.

திவ்ய மாலைகளும், ஆடைகளும் புனைந்தது. திவ்ய கந்தங்கள் பூசியது. எல்லா வியப்புகளும் சான்றது. எல்லையற்றது. எங்கும் முகங்களுடைய தேவரூபம் – 11.

வானத்தில் ஒருங்கே ஆயிரம் இரவிகள் எழுவாராயின் அங்கு தோன்றும் ஒளியை அந்த மகாத்மாவின் ஒளிக்கு நிகராகக் கூறலாம் – 12.

அங்கு பல பகுதிப் பட்டதாய், வைய முழுதும் அந்தத் தேவ தேவனுடைய சரீரத்தில் ஒருங்குற்று நிற்பதை அப்போது பாண்டவன் கண்டான் – 13.

அப்போது தனஞ்சயன் பெருவியப்பெய்தி, மயிர் சிலிர்த்து

அக்கடவுளை முடியால் வணக்கிக் கைகளைக் கூப்பிக் கொண்டு சொல்லுகிறான் — 14.

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

தேவனே, நின் உடலில் எல்லாத் தேவர்களையும் காண்கிறேன். பூத வைகளின் தொகுதிகளைக் காண்கிறேன். தாமரை மலரில் வீற்றிருக்கும் ஈசனாகிய பிரமனையும், எல்லா ரிஷிகளையும் தேவ சர்ப்பங்களையும் இங்கு காண்கிறேன் — 15.

பல தோளும், பல வயிறும், பல வாய்களும், பல விழிகளுமுடைய எல்லையற்ற வடிவிலே நின்னை எங்கணும் காண்கிறேன். எல்லா வற்றுக்கும் ஈசனே எல்லாத் தன் வடிவாகக் கொண்டவனே உனக்கு முடிவேனும், இடையேனும் காண்கிலேன் — 16.

மகுடமும் தண்டும் வலயமும் தரித்தாய், ஒளித்திரளாகி யாங்கணும் ஒளிர்வாய், தழல்படு தீயும் ஞாயிறும் போல அளவிடற் கரியதாக நினைக் காண்கிறேன் — 17.

அழிவிலாய், அழிதற்குரியனவற்றில் மிகவும் சிறந்தது, வையத்தின் உயர் தனி உறையுளாவாய், கேடிலாய், என்றுமியல் அறத்தினைக் காப்பாய், சநாதனை புருஷன் நீயெனக் கொண்டேன். — 18.

ஆதியும் நடுவும் அந்தமுமில்லாய், வரம்பிலா விறலினை, கணக்கிலாத்தோளினை, ஞாயிறும் திங்களும் நயனமாகக் கொண்டனை, எரியும் கனல் போலியலு முகத்தினை ஒளியால் முழுமையுலகையும் கொளுத்து வாய், இங்ஙன முன்னைக் காண்கிறேன் — 19.

வானத்துக்கும் பூமிக்கும் நடுவேயுள்ள இடை வெளியும் எல்லாத் திசைகளும் நின்னால் நிரப்புற்றிருக்கின்றன. உன்னுடைய அற்புதமும் உக்கிரமுமான இவ்வடிவத்தைக் கண்டு மூன்று உலகங்களும் சோர் வெய்துகின்றன — 20.

இந்த வானவர் கூட்டமெல்லாம் நின்னுள்ளே புகுகின்றன. சிலர் அச்சமெய்தி நின்னைக் கை கூப்பிப் புகழ்கின்றனர். மகரிஷிகளும், சித்தர்களுமாகிய கூட்டத்தார் நின்னை வன்மையுடைய புகழுரைகள் சொல்லிப் புகழ்கின்றார். – 21.

ருத்ரர், ஆதித்யர், வசுக்கள், சாத்யர், விசுவே தேவர், அசுவினி தேவர், மருத்துக்கள், உஷ்மபர், கந்தர்வர், யக்ஷர், அசுரர், சித்தர், இக்கூட்டத்தார்களெல்லாம் நின்னை வியப்புடன் நோக்குகின்றனர். – 22.

பெருந்தோளாய், பல வாய்களும், விழிகளும் பல கைகளும் பல கால்களும், பல வயிறுகளும், பல பயங்கரமான பற்களுமுடைய நின் பெருவடிவைக் கண்டு, உலகங்கள் நடுங்குகின்றன யானும் அங்ஙனமே – 23.

வானைத் தீண்டுவது, தழல்வது, பல வர்ணங்களுடையது, திறந்த வாய்களும், கனல்கின்ற விழிகளுமுடையது. இளைய நின் வடிவத்தைக் கண்டு விஷ்ணுவே, எனக்கு நிலை கொள்ள வில்லை. யான் அமைதி காணவில்லை – 24.

அஞ்சு தரும் பற்களையுடைத்தாய், ஊழித்தீ போன்ற நின் முகங்களைக் கொண்ட அளவிலே எனக்குத் திசைகள் தெரியவில்லை. சாந்தி தோன்றவில்லை. தேவர்களின் தலைவனே, வையகத்துக்கு உறைவிடம் ஆவாய், அருள் செய்க – 25.

இந்தத் திருதராஷ்டிரனின் மக்கள் எல்லாரும் மற்ற அரசக் கூட்டத்தார்களுடன் நின்னுள்ளே (புகுகின்றனர்) பீஷ்மனும், துரோணனும், சூதன் மகனாகிய இந்தக் கர்ணனும் நம்முடைய பக்கத்து முக்கிய விரர்களும் – 26

கொடிய பற்களுடைய பயங்கரமான நின்வாய்களில் விரைவுற்று வீழ்கின்றனர். சிலர் நின் பல்லிடைகளில் அகப்பட்டுப் பொடி பட்ட தலையினராகக் காணப்படுகின்றனர் – 27.

பல ஆறுகளின் வெள்ளங்கள், கடலையே நோக்கி வந்து

வீழ்வது போல் இந்த நரலோக வீரர் நின் சுடர்கின்ற வாய்களில் வந்து வீழ்கின்றனர் – 28.

விளக்குப் பூச்சிகள் மிகவும் விரைவுடன் எய்தி எரிகின்ற விளக்கில் வீழ்ந்து நாச முறுதல் போல உலகங்கள் மிகவும் விரைவுடன் நின்வாய்களில் வந்து விழுந்து நாசமடைகின்றன–29.

கனல் நின்ற நின்வாய்களால் எப்புறத்தும் எல்லா உலகங்களையும் நீ தீண்டுகிறாய் விஷ்ணு! நின் உக்கிரமான சுடர்கள் கதிர்களால் வைய முழுதையும் நிரப்பிச் சுடுகின்றன–30.

உக்கிர ரூபம் தரித்த நீ யார்? எனக் குறைத்திடுக. தேவர்களில் சிறந்தாய், நின்னை வணங்குகிறேன். அருள் புரி. ஆதியாகிய உன்னை அறிய விரும்புகிறேன். இங்கு உனது தொழிலை அறிகிலேன் – 31.

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:–

உலகத்தை அழிக்கத் தலைப்பட்ட காலமே நான் மனிதர்களை இங்குக் கொல்லத் தொடங்கியுள்ளேன். இங்கு இரு திறத்துப் படைகளிலே நிற்கும் போராட்கள் அனைவரினும் உன்னைத் தவிர வேறு யாரும் மிஞ்ச மாட்டார்கள் – 32.

ஆதலால் நீ எழுந்து நில். புகழ் எய்து, பகைவரை வென்று செழிய ராஜ்யத்தை ஆள், நான் இவர்களை ஏற்கனவே கொன்றாய் விட்டது. இடக்கை வீரா, நீ வெளிக் காரணமாக மட்டுமே நின்று தொழில் செய் – 33.

துரோணனையும், பீஷ்மனையும், ஜயத்ரதனையும் கர்ணனையும் மற்ற யுத்த வீரர்களையும் நான் கொன்றாய் விட்டது. (வெளிப்படையாக) நீ கொல். அஞ்சாதே, போய் செய். செருக்களத்தில் நின் பகைவரை வெல்வாய் – 34.

சஞ்சயன் சொல்லுகிறான்:–

கேசவன் சொல்லிய இவ்வார்த்தையைக் கேட்டுப் பார்த்தன் மெய்ந் நடுக்கத்துடன் அஞ்சலி புரிந்தான். மீண்டும் கண்ணனை நமஸ்காரம் பண்ணி, அச்சத்துடன் வாய் குழறி வணங்கிச் சொல்லுகிறான். – 35.

அர்ஜுனன் சொல்லுகிறான்:–

இருஷிகேசா, உன்பெரும் கீர்த்தியில் உலகங்களிப்பதும், இன்புறுவதும் பொருந்தும், ராட்சதர் அச்ச முற்று திசைகளில் மறைகிறார்கள். சித்தக் குழாத்தினர் அனைவரும் நின்னை வணங்குகிறார்கள் – 36.

மகாத்மாவே, நின்னை எங்ஙனம் வணங்காதிருப்பார்? நீ, ஆதி கர்த்தா. பிரம்மனிலும் சிறந்தாய். அநந்தா, தேவேசா, வையத்தின் உறைவிடமே, நீ அழிவற்ற பொருள். நீ சத், நீ அசத், நீ அவற்றைக் கடந்த பிரம்மம் – 37.

நீ ஆதிதேவன், தொல்லோன். நீ இந்த அகிலத்தின் பரமநிலையம் நீ அறிவோன். நீ அறிபடுபொருள், நீ பரமபதம், அகந்த ரூபா, நீ இவ்வுலகினுள் பரந்து கிடக்கிறாய் – 38.

நீ வாயு, யமன், அக்கினி, வருணன், சந்திரன், முப்பாட்டனாகிய பிரம்மன் நீ. உன்னை ஆயிரம் முறை கும்பிடுகிறேன். மீட்டு மீட்டும் உனக்கு நமோ நம! – 39.

உன்னை முன் புறத்தே கும்பிடுகிறேன். உன்னைப் பின் புறத்தே கும்பிடுகிறேன். எல்லாமாவாய் உன்னை எப்புறத்தும் கும்பிடுகிறேன். நீ எல்லையற்ற வீரிய முடையாய், அளவற்ற வலிமையுடையாய். சர்வத்திலும் நிலைத்திருக்கிறாய். ஆதலால் நீ சர்வன் – 40

இப்படிப்பட்ட நின் பெருமையை அறியாமல் நின்னைத் தோழன் என்று கருதித் துடிப்புற்று, ஏ, கண்ணா, ஏ யாதவா, ஏ தோழா என்று தவறுதலாலேனும் அன்பாலேனும் நான்

சொல்லியிருப்பதையும் – 41

விளையாட்டிலும், படுக்கையிலும், இருப்பிலும், உணவிலும் தனி இடத்தேனும், அன்றி (மற்றவர் முன்னேயெனினும்)நான் உனக்கு வேடிக்கையாகச் செய்திருக்கும் அவமதிப்புகளையும் அவற்றையெல்லாம் பொறுக்கும் படி வேண்டுகிறேன் அளவற்றோய்! – 42.

சராசரமாகிய இவ்வுலகத்துக்கு நீ தந்தையாவாய், இவ்வுலகத்தால் தொழத்தக்கனை, மிகவும் சிறந்த குரு நீ. உனக்கு நிகர் யாருமில்லை. எனில் உனக்கு மேல் வேறு யாவர்? மூன்று உலகங்களிலும் ஒப்பற்ற பெருமை உடையவனே! – 43.

ஆதலால் உடல் குனிய வணங்கி நின்பால் அருள் கேட்கிறேன். ஈசா, வேண்டுதற்குரியாய், மகனைத் தந்தை போலும், தோழனைத் தோழன் போலும் அன்பனையன்பன் போலும் நீ என்னைப் பொறுத்தல் வேண்டும் – 44.

இதற்கு முன் காணாததை இன்று கண்டு மகிழ்ச்சியுறுகிறேன். எனினும் என் மனம் அச்சத்தால் சோர்கிறது. தேவா எனக்கு நின் முன்னை வடிவத்தைக் காட்டுக. தேவேசா ஜகத்தின் நிலையமே, எனக்கருள் செய் – 45.

முன் போலவே கிரீடமும் தண்டும் கையில் சக்கரமுமாக நின்னைக் காண விரும்புகிறேன். அகில மூர்த்தியே, ஆயிரத்தோளாய் முன்னை நாற்றோள் வடிவினை எய்துக – 46.

ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:–

அர்ஜுனா, யான் அருள் கொண்டு ஆத்ம யோகத்தால் எனது பர வடிவை நினக்குக் காண்பித்தேன். ஒளி மயமாய் அனைத்து மாய், எல்லையற்றதாய், ஆதியாகிய இவ்வடிவத்தை இதற்கு முன் உன்னைத் தவிர வேறு யாரும் பார்த்ததே கிடையாது – 47.

வேதங்களாலும், வேள்வியாலும் கல்விகளாலும் தானங்களாலும் கிரியைகளாலேனும் மனித உலகத்தில் என்னை இவ்வடிவத்தில் உன்னையன்றி வேறுயாராலும் பார்க்க முடியாது. குருகுலத்தில் சிறந்த வீரா – 48.

இப்படிப்பட்ட என் கோர வடிவத்தைக் கண்டு கலங்காதே, மயங்காதே! அச்சம் நீங்கி இன்புற்ற மனத்துடன் எனது முன்னை வடிவத்தை நீ இதோ பார்! 49.

சஞ்சயன் சொல்லுகிறான்:–

இங்ஙனம் வாசுதேவன் அர்ஜுனனிடம் கூறி, மீட்டுத் தன் பழைய வடிவத்தைக் காட்டினான். அந்த மகாத்மா மறுபடி தன் இனிய வடிவமெய்தி அச்ச முற்றிருந்த பார்த்தனை ஆறுதல் கொள்ளச் செய்தான்–50.

அர்ஜுனன் சொல்லுகிறான்:–

ஜனார்த்தனா, நினது தண்மை பொருந்திய இம்மானிட வடிவத்தைக் கண்டு இப்போது யான் அமைதியுற்றேன். என் உணர்வு மீண்டது. இயற்கை நிலை எய்தினேன் – 51.

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:–

காண்பதற்கரிய என் வடிவத்தை இங்கு கண்டனை தேவர்கள் கூட இவ்வடிவத்தைக் காண எப்போதும் விரும்பி நிற்கிறார்கள் – 52.

என்னை நீ கண்டபடி, இவ்விதமாக வேதங்களாலும், தவத்தாலும் தானத்தாலும், வேள்வியாலும் என்னைக் காணுதல் இயலாது. – 53.

பிறிதிடஞ் செல்லாத பக்தியால் மாத்திரமே என்னை இவ்விதமாக அறிதலும், உள்ளபடி காணுதலும் என்னுட் புகுதலும் இயலும் – 54.

**என் தொழில் செய்வான்,**

**எனைத் தலைக் கொண்டோன்**

**என்னுடைய அடியான்**

**பற்றெல்லாம் இற்றான்**

**எவ்வுயிரிடத்தும் பகைமை யிலாதான்**

**யாவன் பாண்ட வா!**

அவனென்னை எய்துவான் – **55**

இங்ஙனம் உபநிஷத்தும், பிரம்ம வித்தையும் யோக சாஸ்திரமும், ஸ்ரீகிருஷ்ணார்ஜுன சம்பாஷணையுமாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில் விஸ்வ ரூப தரிசன யோகம் என்ற பதினொன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

(இவ்வாறு ஸ்ரீமத் பகவத் கீதையின் விஸ்வரூப தரிசன யோகம் குறிப்பிடுகிறது. இது பாரதியாரின் பகவத் கீதை தமிழாக்க மொழி பெயர்ப்பிலிருந்து எடுக்கப் பட்டது. நேரடியான தெளிவிற்காக ஸ்ரீமத் பகவத் கீதையின் விசுவரூப தரிசன யோகம் முழுமையாக இங்கு மேற்கோள் காட்டப் பட்டிருக்கிறது. நூலாசிரியர்).

## 5. பாரத தேவியின் சம்பூரண ரூபம்

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விஸ்வரூபம் காட்டி ஆத்ம நிலையை விளக்கிய தொப்ப எனக்குப் பாரத தேவியின் ஸம்பூரண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தியுபதேசம் புரிந்தருளியதாகத் தனது குருவைக் குறிப்பிடுகிறார் பாரதியார்.

ஜன்மபூமி (ஸ்வதேச கீதங்கள் இரண்டாம் பாகம்) என்னும் நூலில் உள்ள ஸமர்ப்பணமும் முன்னுரையும் என்னும் குறிப்பில் பாரதியார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குரு மணியும் பகவான் விவேகானந்தருடைய தரும புத்திரியுமாகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை ஸமர்ப்பிக்கிறேன்.

மகாகவி சிந்தனை செய்கிறார். ஆழ்ந்த சிந்தனையில் ஈடு படுகிறார். அவருடைய சிந்தனை வெகுதூரம் செல்கிறது. அந்த மாபெரும் மனிதனின் அகக்கண்களின் நெடிது நோக்கில் பாரத தேவியின் சம்பூரண வடிவம் காணப்படுகிறது. அதை அவர் தமிழ் மக்களுக்கும் பாரத மக்களுக்கும் உலகுக்கும் தனது உணர்ச்சி மிக்க கவிதைகள் மூலம் காட்டுகிறார்.

சூரியன் உதிக்கும் போது சேதனப்பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப் பிரகிருதியும் புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கிறது. இவற்றினையொப்பவே, நாட்டில் ஒரு புதிய ஆதர்சம் – ஓர் கிளர்ச்சி, ஓர் தர்மம் – ஓர் மார்க்கம் – தோன்றுமே யானால் மேன் மக்களின் நெஞ்சமனைத்தும் இரவியை நோக்கித் திரும்பும் சூரிய காந்த மலர் போல அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன என்றும் ஜன்ம பூமி பாடல் தொகுப்பிற்கான தனது முன்னுரையில் பாரதி குறிப்பிடுகிறார்.

சூரியன் உதிக்கத் தொடங்கிய உடனேயே உறங்கிக் கிடந்த உலகம் எல்லாம் விழித்தெழுந்து அசையத் தொடங்குகிறது. பறவை

யினங்கள் தங்கள் இனிய கானத்தைக் கிளப்புகின்றன. ஆவினங்களும், எருமைகளும், இதரவிலங்கினங்களும் எழுந்து செயல் படத் தொடங்குகின்றன. செடி கொடிகளும் மலர்களும் புத்துயிர் பெற்று அசைந்து மணம் பரப்பத் தொடங்குகின்றன. மக்கள் குலம் எழுந்து தங்கள் தங்கள் வேலைகளைச் செய்யத் தொடங்குகின்றன.

புள்ளும் சிலம்பின காண், புள் அரையன் கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ என்றும்,

கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தான் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ என்றும்,

கீழ்வானம் வெள்ளென்று எருமைச் சிறு வீடு மேய்வான் பரந்தன காண் என்றும் ஆண்டான் திருப்பாவைப் பாடல்கள் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

மகாகவி பாரதி புதிய ஆதர்தம் பெற்று தேசபக்தி என்னும் நவீன மார்க்கத்தின் வழியில் பாரத மாதாவின் சம்பூரண வடிவத்தை நமக்குக் காட்டுகிறார்.

பாரத தேவியின் அந்தப் பெருவடிவத்தில் மகாகவி பாரதி வெள்ளிப் பனிமலையைக் காண்கிறான். மேலைக் கடலைக் காண்கிறான். அதில் நமது பெருவணிகர்கள் கப்பல்கள் விடுவதைக் காண்கிறான், அதில் புனிதமான சேதுவைக் காண்கிறான். அந்தப் புண்ணிய சேதுவைக் கண்ட போது, கங்கையே, யமுனை கோதாவரி நருமதை காவேரி பொங்குநீர் நதிகள் யாவும் படிந்து அலால் புன்மை போகா – சங்கு எறி தரங்க வேலைதட்ட, இச்சேது என்னும் இங்கிதின் எதிர்ந்தோர் புன்மையாவையும் நீக்கும் அன்றே என்று சேதுவின் பெருமையைக் கூறும் கம்பனுடைய சொற்கள் நினைவுக்கு வருகின்றன.

கவிஞன் மேலும் கங்கையிலும், யமுனையிலும் பொங்கி வரும் நீரின் மிகையைக் காண்கிறான். அந்த நீரின் மிகையை மய்யத்து நாடுகளுக்குக் கொண்டு செல்லலாம் என்று

சிந்திக்கிறான். தென்கடலில் முத்துக் குளிப்பதைக் காண்கிறான். சிந்து என்னும் தெய்வத்திரு நதியின் அமைதியான நீரோட்டத்தைக் காண்கிறான். அப்போது கவிஞனுக்கு நிலவொளியும், சேர நன்னாட்டு அழகு தேவதைகளும் சுந்தரத் தெலுங்கின் நல்லிசை மிக்க பாடல்களும் நினைவிற்கு வருகின்றன. கங்கை நதிப் புறத்து கோதுமைப் பண்டங்களும், காவிரியின் மணம் நிறைந்த கமுகும் வெற்றிலையும், சேரத்துத் தந்தங்களும், கன்னடத்து சந்தனமும், கவியின் கண்களுக்குப் புலப்படுகின்றன. காசியும் காஞ்சியும் அவனுடைய கண்களுக்குக் காணப்படுகின்றன. அந்த நகரங்களின் மக்கள் கலந்து உரையாடிக் கொண்டிருக்கும் நுட்பமான கருவிகளைக் காண்கிறான்.

பட்டினிலும் பஞ்சினிலும் ஆடைகள் செய்து மலைகள் எனக் குவிக்கும் நமது நெசவாளர்களைக் காண்கிறான். ஆயுதங்கள், பல வகைக் காகித ஆலைகள், குடைகள் படைகள், கோணிகள், இரும்பாணிகள் கப்பல்கள் செய்யும் பலவகை ஆலைகளைத் தொழிற் சாலைகளைக் காண்கிறான்.

நாடு முழுவதிலும் பல லட்சக்கணக்கானோர், மந்திரங்கள் கற்கவும், வினைத்தந்திரங்கள் கற்கவும், எந்திரங்கள் செய்யவும், வானையளக்கவும், கடல் மீனை அளக்கவும், சந்திர மண்டலத்தியல் கண்டு தெளியவும், சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கள் பல கற்கவும், காவியம் செய்யவும், காடுகள் வளர்க்கவும், ஓவியம் செய்யவும், நல்ல ஊசிகள் செய்யவும், உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்யவும் பயிலும் பலவகைக் கல்விச் சாலைகளும் தொழிற் சாலைகளும் அமைக்கவுமான பாரத தேசத்தின் விரிவைக் கண்டான் கவிஞன்.

இன்னும் பாரத தேசத்தின் மிகப் பெரிய விரிவான வடிவத்தைப் பாரதி மீண்டும் மீண்டும் காண்கிறான். அதில் மன்னும் இமயமலையும் இன்னறு நீர் கங்கையாறும், வேதங்களும், உபநிடதங்களும், இதிகாசங்களும், புராணங்களும், மற்றும் பலவகை நூறு கோடி நூல்களும் அறிவுக் கருவூலங்களும் மாரத வீரர்களும் மாமுனிவோர் பலரும் காணப்படுகிறார்கள்.

பாரதநாடு பழம்பெரும் நாடாக அதை நாரத கானம் திகழும் நாடாக நல்லன அனைத்தையும் நாடும் நாடாக, பூரண கானம் பொலிந்த நன்னாடாக, புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடாகக் காண்கிறான்.

பாரதத்தாயின் பிரம்மாண்டமான பெருவடிவம் பாரதியின் கண்களுக்கு முன்பாக மீண்டும் மீண்டும் காணப்படுகிறது.

அந்தப் பேருருவத்தில் இலங்கை அரக்கர்களை அழித்து முடித்த ஆரியராணியின் வில் கோதண்டம் தென்படுகிறது. இந்திர சித்தனை இரண்டு துண்டாக எடுத்த இராம பாணம் தென்படுகிறது.

ஒன்று பரம்பொருள், நாமதன் மக்கள், உலகம் இன்பக் கேணி, என்று மிக நல்ல பல வேதங்களை எழுதிய பாரத நாயகியின் திருக்கை தென்படுகிறது.

சித்தமயம் இவ்வுலகம் என்னும் உறுதி நமது சித்தத்தில் ஓங்கி விட்டால் துன்பம் அனைத்தையும் வெல்லலாம் என்று சொன்ன ஆரிய ராணியின் சொல் தென்படுகிறது.

சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினைத் தட்டி விளையாடிய பிள்ளை பாரத ராணி ஒளியுறப் பெற்ற பிள்ளை காணப்படுகிறான். நாம் எல்லாம் ஒரு மேய்ப்பவன் பின்னால் செல்லும் ஆட்டு மந்தை என்று நமது சாத்திரங்கள் கூறவில்லை. துன்பங்களையும், கொடுமைகளையும் பாவச் செயல்களையும் எதிர்த்துச் சீறி எழும் சிங்கங்களாகவே பாரத தேவியின் சொற்கள் எடுத்துக் கூறுகின்றன.

இன்னும் பாரத தேவியின் அந்தப் பெரு வடிவத்தில், காண்டீபம் ஏந்தி உலகினை வெற்றி கொண்டு நம்மை ஆண்டருள் செய்து பெற்று வளர்த்த ஆரிய தேவியின் தோள்கள் தென் படுகின்றன.

சாகும் பொழுதில் கூட தனது இரு செவிக்குண்டலங்களை தானமாகக் கொடுத்த கைகள், இனிய பாகு மொழியில் புலவர்கள் பாடிப் போற்றிய பாரத ராணியின் கைகள் தென்படுகின்றன.

போர்க்களத்தில் பர ஞான மெய்க் கீதையைப் புகன்ற அந்தப் பெருமை மிக்க திருவாய், பகை தீர்க்கத் திறம் தரும் பேரினள் பாரத தேவியின் திருவாய் காணப்படுகிறது.

தனது தந்தை இன்புற வேண்டும் என்பதற்காக தான் அரசாட்சியையும் தையலர் தம் உறவையும் இனி இந்த உலகில் விரும்பேன் என்று சபத மேற்ற திருவுள்ளம், அந்தத் தியாகத் திருவுள்ளம் பாரத அன்னையின் திருவுள்ளம் என்பது தென்படுகிறது.

அன்பு சிவம், உலகின் துயர்கள் யாவையும் அன்பினிற் போகுமென்று இங்கு முன்பே பொழிந்து உலகை ஆண்டதோர் புத்தன் மொழி பாரத அன்னையின் மொழியாகத் தென் படுகிறது.

மிதிலை எரிந்திட வேதப் பொருளைவினவும் ஜனகன் மதி தன் பதியினில் கொண்டதை நின்று முடிக்க வல்ல பாரத அன்னையின் தெளிந்த மதி தென்படுகிறது.

தெய்வீக சாகுந்தலம் என்னும் நாடகம் செய்த கவிதையான பாரத தேவியின் அருட் கவிதை தென்படுகிறது.

பாரதத்தாயின் பெருவடிவம் பாரதியின் கண்களுக்கு இன்னும் விரிவாகத் தென்படுகிறது.

பாரதத்தாய் இத்தனை சிறப்போடு என்று பிறந்தாள் என்று யாராலும் கூற முடியாத அளவிற்கு பண்டைய சிறப்பு மிக்கவள் ஆயினும் இளமை குன்றாத கன்னியாக இருப்பதைப் பாரதி காண்கிறான்.

இவள் கோடி கோடி முகமுடையாள், ஆயினும் உயிர் ஒன்றாகத் திகழ்வதையும் செப்பும் மொழி பதினெட்டுடையாள் எனினும் சிந்தனை ஒன்றுடையாளாக காணப்படுகிறாள்.

நாவினில் வேதமுடையவளாக கைகளில் நலம் திகழ் வாளுடையவளாக, தன்னை மேவினவர்களுக்கு இன்னருள் புரிபவளாக, தீயரை ஒழித்திடும் தோளுடையவளாகக் காணப்படுகிறாள்.

கோடி கோடி தடக்கைகளால் அறங்கள் நடத்துபவளாகவும், தன்னை எதிர்த்து வருபவர்களைத் தூளாக்குபவளாகவும் காணப்படுகிறாள்.

பூமியைக் காட்டிலும் பொறுமை உடையவளாகவும், பெரும் புண்ணிய நெஞ்சுடையவளாகவும் இருக்கிறாள். எனினும் தீங்கிழைப்பவர் முன்பாகக் கொடும் துர்க்கையாகவும் காட்சியளிக்கிறாள்.

கற்றைச் சடை, மதி, வைத்த துறவியைத் தொழுதும், கையில் ஒற்றைத் திகிரி கொண்டு ஏழுலகும் ஆளும் ஒருவனைத் தொழுதும் நிற்கும் காளியின் காட்சியும் தென்படுகிறது.

பாரத அன்னை, யோகத்திலே நிகறற்றவள். உண்மையும் ஒன்றென நன்று அறிவாள். உயர் போகத்திலேயும் நிறைந்தவள். எண்ணரும் பொற்குவை தானுடையாள். அந்த சக்தி மிக்க துர்க்கையும் முழுமையாகத் தென்படுகிறாள்.

நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி நயம் புரிபவள், அவர் அல்லவராயின் அவரை விழுங்கி ஆனந்தக் கூத்திடும் அற்புதச் செயல் நிறைந்த அன்புத்தாயும் தென்பட்டாள்.

வெண்மை நிறைந்த பனிமால் இமயம் பெற்றெடுத்தவளான பாரதத்தாய் அவருடைய சீரிய திவ்ய ரூபம் காணப்படுகிறது.

பாரதத்தாயைப் பேரொளியாக பாரதி காண்கிறார். வேதங்கள் பாடி, உண்மை வேல் கையில் பற்றிக் குதித்து, ஓதரும் சாத்திரம் கோடி உணர்ந்து ஓதி உலகெங்கும் விதைக்கும் பாரதப் பேரொளியாக பாரதத்தாய் காட்சியளிக்கிறாள்.

அவள் கையில் பார்த்தன் கை வில், வாளி ஒளிவீசி, மாரதர் பல கோடி வந்தாலும் அவர்களை எதிர்த்து முறியடிக்கும் வல்லமை கொண்டவளாக பாரதத்தாய் பாரதியின் முன்பாகக் காட்சியளிக்கிறாள்.

## கல்கத்தாவில்

கல்கத்தாவில் ஒரு தேச பக்தரின் மாளிகையில் பின்புறத்தில் உள்ள தோட்டத்தில் ஒரு பெரிய ஆல மரத்தின் கீழ் ஒரு பட்டியக்கல்லில் அமர்ந்து கொண்டு ஆகாயத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டு பாரதி சிந்திக்கிறார்.

அவருடைய சிந்தனை உருவத்தில் நெடிது நோக்குப் பார்வையில் மீண்டும் பாரத தேவியின் பெருவடிவம் தெரிகிறது. இச்சகத்தின்(இந்த உலகத்தின்) பூரணமான ஞானப் புகழ் விளக்காக பாரத மாதேவி காணப்படுகிறாள்.

பேரிமய வெற்பு முதல் பெண் குமரியீராக தொன்மை மிகு ஆரிய நாடாகக் காட்சியளிக்கிறாள். அந்தத்திரு நாட்டில் பனிமால் இமயம் முதல் விந்தியமும் திருவேங்கடமும், பொதிகையும் காணப்படுகிறது. காசி முதல் ராமேசுவரம் வரை புண்ணிய நகரங்கள் தெய்வீகப் பெருநகரங்கள் காணப்படுகின்றன.

யமுனையும், கங்கையும் சிந்து என்னும் தெய்வத்திரு நதியும், பொங்கிவரும் பிரம்ம புத்திராவும், மகாநதியும், கோதாவரியும், கிருஷ்ணாவும் துங்கபுத்திராவும், நருமதையும், தபதியும், காவிரி தென் பெண்ணை பாலாறு வைகை பொருனை என்னும் தெய்வத் திருநதிகளும் பாய்ந்து பொன்விளைக்கும் செழுமை மிக்க பூமி காணப்படுகிறது.

பாரத அன்னை, தொன் மறைகள் நான்குடைய சீரும் சிறப்புமாய் எண்ணற்ற செல்வங்களுடன் பாரனைத்தும் அஞ்சும் சிங்கத்தின் மீது அமர்ந்து பவனி வருகிறாள். சத்தியமே செய்து தருமமே என்று ஒலி செய்து முத்திதரும் வேத முரசு கொட்டுகிறது. பொற்றாமரைத்தார் புனைந்து ஒளி குன்றாத வயிரக் கொடியேந்தி நிற்கிறாள்.

வந்தே மாதரம் என்று பாட்டிசைத்து தாயின் மணிக்கொடிக்கு வணக்கம் செலுத்த ஆயிரமாயிரம் பாரத புத்திரர்கள் அணி வகுத்து அணி அணியாய் நிற்கிறார்கள். அந்தச் சீர்மிகு அணி வகுப்பில்,

* செந்தமிழ் நாட்டுப் பொருநர் கொடுந்தீக் கண் மறவர்கள்.
* சேரன் தன் வீரர்.
* சிந்தை துணிந்த தெலுங்கர்.
* தாயின் சேவடிக்கே பணி செய்திடும் துளுவர்.
* கன்னடர் ஒட்டியரோடு.
* போரில் காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்.
* பொன்னகர் தேவர் களொப்ப நிற்கும் பொற்புடையார் இந்து ஸ்தானத்து மல்லர்.
* பூதல முற்றிடும் வரையும், அறப்போர் விறல் யாவும் மறப்புறும் வரையும், மாதர்கள் கற்புள்ள வரையும் – பாரில் மறை வரும் கீர்த்தி கொள் ரஜபுத்ர வீரர்.
* பஞ்ச நதத்துப் பிறந்தோர் – முன்னர் பார்த்தன் முதல் பலர் வாழ்ந்த நன்னாட்டார்.
* துஞ்சும் பொழுதினும் தாயின் – பதத்தொண்டு நினைந்திடும் வங்கத்தினோரும்.

அணிவகுத்து நிற்கிறார்கள். அந்த அருமையான அற்புதக் காட்சி பாரதியின் கண் முன்னே காணப்படுகிறது.

இத்தகைய பெருமை மிகு பாரதநாடு ஏன் சென்ற ஆயிரம் ஆண்டுகளாக அன்னியருக்கு அடிமைப்பட்டுத் துன்ப துயரங்களுக்கு ஆளாயிற்று?

இத்தகைய புண்ணிய பூமியிலே இன்று பாமரராய் விலங்குகளைப் போல் வாழ்வதை நினைந்து பாரதி மனம் வருந்தினார். நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால் என்று கொதிப்படைந்தார்.

நண்ணிய பெருங்கலைகள் பத்து நாலாயிரம் கோடி நயந்து நிற்கும் புண்ணியத்திரு நாட்டில் இவர் பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார், என்று மனம் வேதனைப் படுகிறார்.

கெட்ட கனவுகள் வந்து போவதைப் போல போகின்ற பாரதத்தை வலிமையற்ற தோளினாய், மார்பிலே ஒடுங்கினாய், பொலிவிலா முகத்தினாய், பொறியிழந்த விழியினாய் ஒலியிழந்த குரலினாய், ஒளியிழந்த மேனியாய் கிலி பிடித்த நெஞ்சினாய் கீழ்மை கீழ்மையென்றும், வேண்டுவாய் போ, போ, போ என்று விரட்டுகிறார்.

நல்ல கனவுகள் தோன்றுவதைப் போன்ற வருகின்ற பாரதத்தை வா, வா என்று சிந்திக்கிறார்.

ஒளி படைத்த கண்ணினாய், உறுதி கொண்ட நெஞ்சினாய், களி படைத்த மொழியினாய், கடுமைக்கொண்ட தோளினாய், தெளிவு பெற்ற மதியினாய், சிறுமை கொண்டு பொங்குவாய், எளிமை கொண்டு இரங்குவாய், ஏறு போல் நடையினாய் வா, வா, வா என்று அழைக்கிறார்.

கோடி கோடியாக நிற்கும் பாரத மக்கள் முழுமையையும் ஒரே சங்கமாக ஒரே குடும்பமாக ஒப்பில்லாத சமுதாயமாக அனைவருக்கும் அனைத்தும் பொது உடைமையாக, உலகத்திற்கொரு புதுமையாக, எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தி இல்லாரும் உடையாரும் இல்லாத கம்பன் கண்ட சமுதாயத்தை பாரதி தனது கூர்மையான கண்கள் மூலம் ஒரு புதிய சமுதாயக் காட்சியை பாரத சமுதாயத்தின் அற்புதமான காட்சியைக் காண்கிறார்.

பங்கிம் சந்திரரின் வந்தே மாதர கீதம் பாரதியின் காதுகளில் ஒலிக்கிறது.

## 6. வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் வாழிய பாரத மணித்திரு நாடு

பாரத சமுதாயத்தின் உயரிய பெரிய குடும்பத்தில் வங்கத்தாயையும், தெலுகு தல்லியையும், தமிழ்த்தாயையும் மற்றுமுள்ள சகோதரிகளையும் பாரதி காண்கிறார்.

பாரதத்தின் பகுதியாக தமிழகத்தின் தனிச் சிறப்புகளை பெருமைப் படுத்திக் காண்கிறார்.

பட்டுடுத்துகிலுடுத்திய செந்தமிழ்த்தாயின் பேரொளியைப் பாரதி காண்கிறார்.

வேதம் நிறைந்த தமிழ் நாடு, உயர் வீரம் செறிந்த தமிழ்நாடு, நல்ல காதல் புரியும் அரம்பையர் போல் இளங் கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு கவிஞனின் கண் முன் காணப்படுகிறது.

காவிரி, தென்பண்ணை, பாலாறு வையை, பொருனை நதி மற்றும் பல புண்ணிய ஆறுகள் பாய்ந்து தமிழ்த்தாயின் மேனி செழித்து நிற்பதைக் கவிஞர் காண்கிறார். முத்தமிழ் மாமுனி வாழும் நீண்ட மலை காத்து நிற்கும் தமிழ் நாட்டைக் கவிஞர் காண்கிறார். உலகில் உள்ள செல்வங்கள் அனைத்தும் குவிந்து கிடக்கும் தமிழ் பூமியைக் காண்கிறார்.

நீலத்திரை கடலோரத்தில் நின்று நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை வட மாலவன் (திருவேங்கட மலை) குன்றம் இவற்றிடையில் புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ் அன்னையைப் பாரதி காண்கிறார்.

கம்பன் பிறந்த தமிழ் நாட்டையும், கல்வியில் சிறந்த தமிழ் நாட்டையும், நல்ல பல சாத்திரங்களின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ் நாட்டையும், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாட்டையும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் ஓர் மணி ஆரம் படைத்த தமிழ் நாட்டையும் கவிஞர் பிரான் தனது கண்முன் காண்கிறார்.

தமிழகத்தின் பழம் பெருமைகள் பாரதியின் கண்களின் முன்பாக ஒவ்வொன்றாகத் தோன்றிச் செல்கின்றன. இலங்கை, புட்பகம், சாவகம் முதலிய தீவுகள் பலவற்றிற்கும் சென்று அங்கு தங்கள் புலிக்கொடி மீன் கொடிகளை நாட்டிய தமிழ் நாட்டையும்,

விண்ணையிடிக்கும் தலை இமயம் என்னும் வெற்பை (நெடு மலையை) யடிக்கும் திறனுடையார் என்றும் சமர் செய்து கலிங்கத்து இருளைப் போக்கிய தமிழ் நாட்டையும் நினைத்துப் பார்க்கிறார்.

சீனம், மிசிரம், யவனம் மற்றும் தேசம் பலவும் புகழ் வீசிக் கலை ஞானம், படைத்தொழில், வாணிபம் ஆகியவற்றையும் நன்று வளர்த்த தமிழகத்தை நினைத்துப் பார்க்கிறார்.

ஆதிசிவன் பெற்ற தமிழையும், அகத்தியன் இலக்கணம் வகுத்த தமிழையும், மூன்று தமிழ் மன்னர்கள் போற்றி வளர்த்த தமிழையும், தமிழ் தந்த சாத்திரங்கள் பலவற்றையும், சங்கத்தமிழையும், அற நூல்களையும், ஐம்பெருங்காப்பியங்களையும், சைவத் திருமுறைகளையும், திவ்யப் பிரபந்தங்களையும், கம்பனையும், வள்ளுவனையும், இளங்கோவையும், தாயுமானவரையும், பட்டினத்தாரையும், வள்ளலாரையும், சுப்ரமணிய அய்யரையும், நினைத்துப் பெருமிதம் கொள்கிறார்.

பாரதியின் மெய் சிலிர்க்கிறது. தமிழையும், தமிழ் நாட்டையும் அதன் பெருமைகளையும் தன் உணர்வின் உணர்வாக கொள்கிறார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனியதாவதெங்கும் காணோம். பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு நாம் ஏன் வாழ்கின்றோம்?

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல, இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. ஊமையராய் செவிடர்களாய், குருடர்களாய் நாம் ஏன் வாழ்கின்றோம்? என்று மன முறுகி நிற்கிறார் கவிஞர். அவருடைய உடல் சிலிர்க்கிறது. உள்ளம் பொங்குகிறது.

தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவு வகை செய்தல் வேண்டும். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய வேண்டும்.

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்று புத்துணர்வு பெற்று எழுந்து நிற்கிறார்.

வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு, இன்றைமை வருத்தும் இன்னல்கள் மாய்க, நன்மை வந்தெய்துக, தீதெலாம் நலிக. அறம் வளர்ந்திடுக, மறமடிவுறுக! வந்தேமாதரம் வந்தே மாதரம் என்று கூறி அன்னையை நினைந்து ஆவேசம் கொள்கிறார்.

## 7. பாரத பூமி பழம்பெரும் பூமி

பாரத பூமி பழம் பெரும் பூமி
நீரதன் புதல்வர் இந் நினைவ கற்றாதீர்,
பாரத நாடு பாருக்கெல்லாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்நினைவ கற்றாதீர்

என்று நெடிது நோக்குடன் மகாகவி தனது சிந்தனையைச் செலுத்துகிறார். வெகு தூரத்துக் காட்சிகளெல்லாம் தனது கண்ணுக்குப் புலப்படுகின்றன.

பாரத மண்ணில் தோன்றி பாரதத்திற்கும் உலகிற்கும் வழி காட்டிய வாழையடி வாழையாக வந்த பல மகரிஷிகள், மாமுனிவர்கள், சித்தர்கள், சான்றோர், தவத்திற் சிறந்தோர், பெரும் புலவர்கள், பேரரசர்கள், மாவீரர்கள், அரசியல் அறிஞர்கள், அறிவியல் மேதையர், மற்றும் மேலோர் பலரும் கவிஞனின் கண்களுக்குப் புலப்படுகின்றனர்.

வியாச பகவானும், அகத்தியனும், வசிட்டனும் வாம தேவனும், விஸ்வாமித்திரனும், பரசுராமனும், பீஷ்மனும், துரோணரும், வால்மீகியும், கம்பனும், ஒரு பக்கம் இராவணனும் இந்திரசித்தனும், கும்பகருணனும், அதிகாயனும், அட்சயகுமாரனும் மறுபக்கம் இராம பிரானும், இலக்குவனும், பரதனும், குகனும், சுக்கிரீவனும் வீடணனும், சஞ்சீவி மலையைப் பெயர்த்து வந்த மாவீரன் சொல்லின் செல்வன் ஆஞ்ச நேயனும்,

காண்டீபனும், கர்ணனும், பீமனும் மற்ற வீரர்களும் பாரத தேசத்தின் குல தெய்வமான கண்ணபிரானும் மகாகவியின் கண்களுக்குக் காணப்படுகிறார்கள்.

சீதாபிராட்டியும், பாஞ்சாலியும் கண்ணகியும், அருந்ததியும், பாரதியின் கண்களுக்கு முன் காணப் படுகிறார்கள். பாரதப்

பெண்கள் எல்லாம் சக்தியின் வடிவமாகவே கவிஞனுக்கு காணப் படுகிறார்கள்.

இத்துடன் பாரத புண்ணிய பூமியில் அன்னியர்களும் அன்னிய ஆங்கிலேயர்களும் செய்துள்ள சேதங்களும் ஏற்படுத்தியுள்ள படு காயங்களும் பாரதியின் கண்களுக்குத் தென் படுகின்றன.

பாரதத்தில் தோன்றிய கணித மேதைகள், வானியல் வல்லோர், ஆயிரமாயிரம் காவியங்கள் செய்த கவிஞர், இசை மேதைகள், சிற்பிகள், வணிக நூல்களும், பொருள் நூல்களும் இயற்றியோர் மற்றும் கம்பன் என்றொரு மானிடன், காளிதாசன், உம்பர் வானத்து கோளையும் மீனையும் அளந்த பாஸ்கரன், ஆரியபட்டன, இலக்கணம் கண்ட பாணினி, அகத்தியன் தொல்காப்பியன், ஆதி சங்கரர், இராமானுசர், சேரன் தம்பி, தெய்வ வள்ளுவன், பாண்டிய சோழர்கள், அசோகன், சிவாஜி அன்னயாவும் பாரதியின் கண்ணுக்குப் புலப்படுகின்றன.

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின் மீது தனியரசாணை, பொழுதெல்லாம் நினது பேரருளின் நெறியிலே நாட்டம், கருமயோகத்தில் நிலைத்திடல் என்றிவையருளாய், குறிகுணம் இல்லாததாய் அனைத்தாய்க் குல விடும் தனிப்பரம்பொருளே என்று கூறி பாரதி தனி ஆதர்சம் பெறுகிறான்.

புதிய தேசபக்தி என்னும் புதிய மார்க்கம் தோன்றி நடெங்கும் புதிய அசைவுகள் வெளிப்படுவதைக் கவிஞன் காண்கிறான்.

சத்திரபதி சிவாஜி தனது சைன்யத்திற்குக் கூறிய வீர உரை பாரதியின் நினைவிற்கு வருகிறது. குரு கோவிந்த சிம்மர் தனது வீரர்களுக்குக் கூறிய வார்த்தைகள் பாரதியின் நினைவிற்கு வருகின்றன. பங்கிம் சந்திரரின் வந்தே மாதர கீதம் பாரதியின் நினைவிற்கு வருகிறது.

இராம கிருஷ்ண பரமஹம்சரும் சுவாமி விவேகானந்தரும், இராமலிங்க சுவாமிகளும், அபேதானந்தரும், தாதாபாய்

நௌரோஜியும், லோக மான்ய பாலகங்காதரத்திலகரும், லாலா லஜபதிராயும், வ.உ. சிதம்பரனாரும், சுப்ரமணிய சிவாவும், மோகன் தாஸ் கரம்சந்திர காந்தியும் தன் முன் வந்து நிற்பதைப் பாரதி காண்கிறார்.

அச்சம் தவிர் வையத் தலைமை கொள், என்று பாரதி மெய் சிலிர்த்து எழுதுகிறார். சேதமில்லாத ஹிந்துஸ்தானத்தைத் தனது தெய்வமாகக் காண்கிறார்.

ஒரு புதிய தேசீயம், தேச பக்தியும் தெய்வ பக்தியும் இணைந்த தேசீயம் பாரதியின் கண் முன்பாக வந்து நிற்கிறது. அந்தப் புதிய தேசீயம் சாதி உணர்வுகளுக்கு அப்பாற் பட்டது. மொழிவழி உணர்வுகளைக் கடந்தது. மத உணர்வுகளைத் தாண்டியது.

**ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்**

**ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்**

என்று பாரதி குரல் எழுப்பினார்.

இந்த நாட்டில் பிறந்த அனைவரையும் ஹிந்துக்கள் என்றும் சாதியும் மொழியும் மதமும் தனி மனிதனுக்குரியது என்றும் அதற்கப்பால் அனைவரும் இந்தியர், பாரத புத்திரர் என்றும் இந்த நாட்டில் பிறந்த முஸ்லிம்களை இந்திய முஸ்லிம்கள் என்றும் இந்த நாட்டில் பிறந்த கிறிஸ்தவர்களை இந்தியக் கிறிஸ்தவர்கள் என்றும் பாரதி கருதினார்.

பாரதியின் தேசீயம் ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் வகுக்கப்பட்ட அரசியல் நிர்வாக எல்லைக்கோடுகளுக்கப்பாற்பட்டு செல்கிறது.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்

**சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்த்து**

**சிறந்ததும் இந்நாடே – இதை**

**வந்தனை கூறி மனதில் இருத்தி என்**

**வாயுற வாழ்த்தேனோ – இதை**

**வந்தே மாதரம் வந்தே மாதரம்**

**என்று வணங்கேனோ?**

என்பதே பாரதியின் தேசீய உணர்வாகும். எனவே பாரதியின் தேசீயம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக பாரத தேசத்தின் பண்பாட்டில், பாரம்பரியத்தில் தோன்றி வளர்ந்து மலர்ந்துள்ள தேசீயமாகும். அது பாரதியின் இதயத்தில் தாமரையாக விரிந்து மலர்ந்திருந்த தேசீயமாகும். அதுவே இந்துத்வ தேசீயம், அதுவே இந்தியத்வ தேசீயம், அதுவே பாரதத்வ தேசீயமாகும்.

# 8. நிறைவுறை

பாரத தேசீயம் என்பது ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுழல்வதல்ல. அது ஒரு அனைத்தளாவிய உலகளாவிய பிரம்மாண்டமான தர்மசக்கரத்தில் சுழல்வதாகும். லோக க்ஷேமம், உலக நன்மை என்பதே நமது மகா மந்திரமாகும். அனைவருக்கும் நன்மை உண்டாகட்டும் என்பதே நமது பிரார்த்தனையாகும்.

உலகம்யாவையும் தாமுள வாக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும் என்பது கம்பன் வாக்கு.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்பது சேக்கிழாரின் சொல்.

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு என்பது வள்ளுவப் பேராசானின் தொடக்கம்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பது ஆனந்தமயமான தமிழ்ச் சொல். அதனால்தான் வையத் தலைமை எனக்கருள்வாய் தாயே என்று பாரதி பராசக்தியை வேண்டுகிறார்.

வையத்தலைமைகொள் என்று பாரத புத்திரர்களுக்கு பாரதி வேண்டுகோள் விடுகிறார்.

பாரதி வாழ்க, பாரதி புகழ் வாழ்க

பாரதியின் தேசீயம் வாழ்க வளர்க

வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

நூலாசிரியரைப் பற்றி :–

இந்நூலாசிரியர் திரு. அ. சீனிவாசன், வயது 78 சிறந்த தமிழ் எழுத்தாளர். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். அத்துடன் தெலுங்கு, மலையாள மொழிகளும் அறிந்தவர். இந்தி மொழியிலும் பரிச்சியம் உண்டு.

தமிழில், அரசியல், பொருளாதாரம், தத்துவஞானம், இலக்கியம் தொடர்பான பல நூல்களை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தும், பல கட்டுரைகள் எழுதியும் தமிழாக்கம் செய்து அவை வெளியாகியுள்ளன. அவர் தமிழ் ஆக்கம் செய்துள்ள முக்கிய நூல்களில் காரல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறும் ஒன்றாகும்.

திரு. அ. சீனிவாசன், 1980–ம் ஆண்டுகளில் ஜனசக்தி, வார இதழ், நாளிதழ் மார்க்ஸிய ஒளி மாத இதழ் ஆகியவற்றின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். அவர் ஆற்றியுள்ள சிறந்த எழுத்துப் பணிகளுக்காக சோவியத் நாடு நேரு விருதும், சிறந்த பத்திரிகையாளர் பணிக்காக சர்வதேசப்பட்டயமும் பெற்றுள்ளார். அவர் சில சர்வதேச அமைப்புகளில் இந்தியா பற்றிய பல ஆராய்ச்சி கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

திரு. அ. சீனிவாசன் 1925–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6–ந் தேதி இன்றைய விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், வத்ராப் ஒன்றியம், மகாராஜபுரம் கிராமத்தில் பிறந்தார். மகாராஜபுரம் கிராமம், சாத்தூர் வத்ராப், விருதுநகர் ஆகிய ஊர்களில் கல்வி பயின்று, இரண்டாம் உலகப் போர் காலத்தில் 1943–47 ஆண்டுகளில் இந்திய விமானப்படையில் சேர்ந்து தகவல் தொடர்பு பொறியாளராகப் பயிற்சி பெற்று பணியாற்றினார்.

திரு. அ. சீனிவாசன் சிறுவயது முதலே சுதந்திரப் போராட்டங்களிலும், அரசியல் பணிகளிலும் தீவிரமாகப் பணியாற்றி வருபவர். காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி, சுயமரியாதை இயக்கம், கம்□னிஸ்ட் கட்சி இயக்கங்களில் தீவிரமாகப் பங்கு கொண்டவர். 1947–ம் ஆண்டு முதல் இந்திய கம்□னிஸ்ட் கட்சியில் முழு நேரமும் பணியாற்றத் தொடங்கினார்.

1948–49 ம் ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட போது, திரு. அ. சீனிவாசன் கைது செய்யப்பட்டு கொடுமையான சித்திரவதைக்கும், அடக்குமுறைக்கும் கொடும் தண்டனைகளுக்கும் ஆளானார். மதுரை, சேலம் சிறைகளில் கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார். கம்யூனிஸ்ட், மற்றும் தொழிலாளர் விவசாயிகள் இயக்கங்களிலும் போராட்டங்களிலும் பங்கு கொண்ட பலமுறை சிறை சென்றவர்.

திரு. அ. சீனிவாசன், இராஜபாளையம், தளவாய்புரம், சத்திரப்பட்டி சிவகாசி, சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை முதலிய நகரங்களில் பல பிரிவு தொழிலாளர்களுக்கும் தொழில் சங்கங்கள் அமைத்து தொழிற்சங்கத் தலைவராக தீவிரமாகப் பணியாற்றியுள்ளார். விவசாயிகள் சங்கங்கள் அமைத்து அவர்களுடைய உரிமைகளுக்காகப் பாடுபட்டுள்ளார்.

1966 –ம் ஆண்டில் சென்னைக்கு வந்து, சென்னை ஹார்பர், ஆவடி டாங்க் தொழிற்சாலை, கல்பாக்கம் அணு மி ன்நிலையம் ஆகிய பகுதிகளில் தொழிற்சங்கத் தலைவராக தீவிரமாகப் பணியாற்றி பல போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தியுள்ளார். ஆவடி டாங்க் தொழிற்சாலைப் போராட்டத்தில் போலீஸ் அடக்குமுறைக்கு ஆளாகி, தடியடிபட்டு, பலத்த காயமடைந்து, நிறை சென்று தியாகத் தழும்பு ஏறியவர்.

திரு.அ. சீனிவாசன் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில், மாவட்ட, மாநில அளவிலும் தேசீய அளவிலும் பல பொருப்புகளில் பணியாற்றியவர். தமிழ் மாநில துணை செயலாளராகவும், தேசீயக்குழு உறுப்பினராகவும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாகப் பொருப்புவகித்து, கட்சியின் மாநில அளவிலான அமைப்பு நிலைப்பணிகள், பத்திரிகை பிரசுரப் பணிகள், கட்சியின் அரசியல் கல்வி பயிற்சிப்பணிகளில் ஈடுபட்டு பணியாற்றியவர்.

திரு. அ. சீனிவாசன், பல்கேரியா, சோவியத் யூனியன், செக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளுக்குச் சென்று விரிவாகச் சுற்றுப்பயணம் செய்து அனுபவம் பெற்றவர்.

திரு. அ. சீனிவாசன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அதன் வேட்பாளராக திராவிட முன்னேற்றக் கழக அணியில்

சிவகாசி பாராளுமன்றத் தொகுதியில் 1984–ம் ஆண்டிலும் 1991–ம் ஆண்டிலும் போட்டியிட்டு மிகவும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார். இருமுறையும் 1984–ம் ஆண்டில் இந்திரா காந்தி படுகொலை, 1991–ம் ஆண்டில் ராஜீவ் காந்தி படுகொலை காரணமாக ஏற்பட்ட அலை அவருக்கு பாதகமாக அமைந்தது.

திரு.அ. சீனிவாசன் தனக்கு ஏற்பட்ட பல்வேறுபட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி 1999–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6–ந் தேதி பாரதீய ஜனதா கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு அதன் மாநில அளவிலான பொறுப்புகளில் பணியாற்றி வருகிறார். இப்போது பாரதீய ஜனதா கட்சியின் மாநில இலக்கிய அணித் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார். ஒரே நாடு, விஜய பாரதம் ஆகிய பத்திரிகைகளுக்கு எழுதி வருகிறார். தமிழ் இலக்கியம் தொடர்பான, குறிப்பாக பாரதி, கம்பன், சிலப்பதிகாரம், நாலாயிரத்திவ்ய பிரபந்தம் தொடர்பான பல நூல்கள் எழுதியும் வெளியிட்டும் வருகிறார். மகாகவி பாரதி பற்றிய ஈடுபாட்டின் காரணமாக அவர் பாரதி அ. சீனிவாசன் என்று அழைக்கப்படுகிறார்.

பாரதி தொடர்பான வேறு பல நூல்களை எழுதி வருகிறார். தமிழ் இலக்கியம் தொடர்பாக அண்மைக்காலத்தில் அவர் எழுதியுள்ள நூல்களின் பட்டியல் இந்நூலின் பின் அட்டையில் காணலாம்.

நூலாசிரியர் அ. சீனிவாசன் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்:

1. பாரதப்பண்பாட்டு தளத்தில் பாரதி – ரூ.50/–

2. பாரதியின் புதிய ஆத்திசூடி – ஒரு விளக்கவுரை – ரூ.75/–

3. சிலப்பதிகாரத்தில் வைதீகக்கருத்துகள் – ரூ.75/–

(நூல்கள் கிடைக்குமிடம்:
10/6, வேதாசலம் தெரு
சாலிகிராமம்
சென்னை – 600 093

4. சிலப்பதிகாரமும் திவ்யப்பிரபந்தமும்
(பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – ரூ.60/–

5. சியாமபிரசாத் முக்கர்ஜி வாழ்க்கை வரலாறு – ரூ.10/–

6. பாரதீய ஜனசங்கம் முதல் பாரதிய ஜனதாகட்சி வரை 50 ஆண்டு வரலாற்றுக் குறிப்புகள் – ரூ. 10/–

7. நெசவாளர்களும் நெசவுக்தொழிலும் – ரூ. 10/–

(மூன்று நூல்களும் கிடைக்குமிடம், கமலாலயம், 19 வைத்யராம் தெரு, தி.நகர், சென்னை – 600 017)

அச்சில் உள்ள நூல்கள்:–

1. ஆழ்வார்களும் பாரதியும்
2. கம்பன் – ஒரு சமுதாயப்பார்வை
3. கம்பநாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும்
4. கம்பன் காவியத்தில் விதியின் பிழையும் அறத்தின் வெற்றியும்
5. கல்யாண ராமனும், பரசுராமனும்
6. ஸ்ரீராமனும் கோதண்டமும்




# கல்யாண சுப சமிதி

- கலாச்சார பண்பாட்டு பல நோக்கு சேவை நிறுவனம்.
- கணிணி திருமண தகவல் மையங்களின் இணைப்பு.
- ஒரேமுறை கட்டணம் ரூ.360/- மட்டும் வேறு எதுமில்லை.
- திருமணம் ஆகும் வரை தமிழகத்தில் எங்கிருந்தாலும் தபால் மூலம் பொருத்தமான ஜாதகங்கள் வீடு தேடி வரும்.
- மாதாந்திர ஜாதி வாரி கூட்டங்களுக்கு இலவச அனுமதி.
- வருடம் இரண்டு முறை சுயம்வரங்கள்.
- விதவை, விவாகரத்து ஆனவர், முதிர் கன்னிகளுக்கு விசேஷமான கவனம், ஏற்பாடுகள், வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- தொலைதூர கிராம மக்களுக்கு கட்டணம் இல்லை 10 எண்ணிக்கையுள்ள ரூ. 5/- மதிப்புள்ள மொத்தம் 50/- ரூபாய்க்கு ஸடாம்பு போதுமானது.
- இலவச ஜாதக ஆலோசனை, இலவச பரிகார முறைகளை தெரிவித்தல்.
- கிளைகளுக்கு இலவச அனுமதி I.D. கார்டுடன் அனுமதி.

தொர்பு கொள்க

**தமிழக தலைமையகம்**
**கல்யாண சுப சமிதி**
No. 4/187 E, 38 வது தெரு, சிட்கோ நகர்,
வில்லிவாக்கம், சென்னை - 600 049.
☎ : 2617 00 33. 2617 18 00. 2598530. Cell : 9444156943

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விஸ்வரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கியதொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூரண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களில் இச்சிறு நூலை சமர்ப்பிக்கிறேன்.

(மகாகவி சுப்ரமணிய பாரதியார் தனது ஸ்வதேச கீதங்கள் என்னும் நூலிற்கு எழுதிய சமர்ப்பணம்).